# புள்ளடியின் பலம்

தொகுதி 2 இதழ் 1 தேர்தல் ஆணைக்குழு ஜனவரி – ஏப்பிறல்

## தொகுப்பாளர் குறிப்பு

2018 பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு சந்தர்ப்பமாக காணப்பட்டது. சுமார் 60 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தாபிக்கப்பட்டிருந்த தேர்தல்கள் திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் 19 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தோடு தேர்தல் ஆணைக்குழுவாக தாபிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தல், இலங்கை முழுவதும் அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்குமான முகவர்களை ஒரே தடவையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான தேர்தலொன்றை நடாத்துதல் மற்றும் இதுவரை காலமும் காணப்பட்ட தேர்தல் முறைமைக்கு வேறுபட்ட வட்டாரம் மற்றும் விகிதாசார கலப்பு முறையில் தேர்தலை நடாத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளல் ஆகிய விடயங்கள் காரணமாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு இத்தேர்தல் மிகவும் முக்கியத்துவம் கொண்ட ஒரு சந்தர்ப்பமாக காணப்பட்டது. மேற்சொன்ன மூன்று காரணங்களின் அடிப்படையில் இத்தேர்தல் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வரலாற்று சிறப்பு மிக்க சந்தர்ப்பமொன்றாகக் காணப்பட்டது. மாத்திரமின்றி அது ஒரு சவால்மிக்க பணி யொன்றாகவும் காணப்பட்டது. புதிய தேர்தல் முறைமையொன்றென்பதால் அனைத்து அச்சிடப் பட்ட படிவங்களைத் தயாரித்தல், அலுவலர்களைப் பயிற்றுவித்தல், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் என்பவற்றை இது தொடர்பாக அறிவுறுத்துதல் போன்றே மிகக் குறுகிய காலமொன்றினுள் வாக்கெடுப்பை நடாத்த வேண்டி ஏற்பட்டமை அந்த சவால் மிக்க இலக்காகக் காணப்பட்டது. ஒரு சில குறைபாடுகளுக்கு மத்தியில் இந்த சவால்மிக்க இலக்கை வெற்றி கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சாத்தியம் கிடைத்துள்ளதென்பது தேர்தலின் பின்னர் அனைத்து தரப்புக்கள், குழுக்கள் என்பவற்றிலிருந்து எமக்கு கிடைக்கப்பெற்ற பாராட்டுக்களிலிருந்து தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஆதலால் இவ்வாறான வெற்றிகரமான இலக்கொன்றை இலகுவாக அடைந்து கொள்வதனூடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கேற்பட்ட மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் “புள்ளடியின் பலம்” என்ற செய்திச் சஞ்சிகையின் இரண்டாம் இதழில் இத்தேர்தலை தலைப்பாக எடுத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மிகவும் நடைமுறைச் சாத்தியமான மற்றும் பயனுடைய ஓர் அம்சமெனச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

புள்ளடியின் பலம் என்ற செய்திச் சஞ்சிகையின் இரண்டாம் இதழ் கடந்த தேர்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய விசேட அம்சங்கள் உள்ளடக்கப்பட்ட கருத்தாழமிக்க ஆக்கங்களை உள்ளடக்கியது. இந்தப் பாரிய பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் ஆணைக் குழுவின் மதிப்பும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.


**- தொகுப்பாளர்**

## பெண்கள் பிரதிநிதித்துவத்தினால் பயனுறுதிபெறும் பிரதேச நிருவாகம்





சனநாயகம் தொடர்பான மிகவும் பிரபல்யமான மற்றும் எளிமையான வரைவிலக்கணமாக இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுவது, அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் அவர்கள் தெரிவித்துள்ள “மக்களால் மக்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற மக்களின் ஆட்சி” என்பதாகும் அதன் உண்மையான அர்த்தத்தில் செயன்முறைப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பாக சமகாலத்தில் மிக விரிவாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. சனநாயகம் தொடர்பாக ஆரம்ப காலத்தில் காணப்பட்ட கருத்தான “பெரும்பான்மை மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிருவாகம்” என்பதை நவீன காலத்தில் அது அதற்கப்பால் நீண்ட தூரம் பயணித்துள்ளது. எவரையும் கைவிட்டு விடாத பிரதிநிதித்துவம் அல்லது பல்லின சமூகக் குழுக்களில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற நிருவாகம் சனநாயகத்தின் உள்ளடக்கமாக இருத்தல் வேண்டுமென நவீன காலத்தில் விரிவாக ஏற்றுக்கொள்கின்ற வரைவிலக்கணமொன்றெனினும் அது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமாக இடம்பெறுகின்றதென்பது விவாதத்திற்குட்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக மாறியுள்ளது.
குறிப்பாக பங்கேற்பு சனநாயகம் தொடர்பான எண்ணக்கருவுக்கு ஆரம்ப காலத்தில் காணப்பட்ட பிரமாணமான தேர்தலொன்றின் போது வாக்களித்தலென்பது சமகாலத்தில் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டிற்கு மறைமுகமாக தலையீடு செய்தல் என்பது வரை விரிவடைந்ததை தொடர்ந்து பல்லின சமூகக் குழுக்களில் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்தல் சனநாயகத்தின் கட்டாய அளவுகோள் ஒன்றாக மாற்றமடைந்துள்ளது. மேலும் புதிய தலைபொன்றாகா இல்லையெனினும், பல்லின சமூகக் குழுக்கள் பிரதிநிதித்துவத்தின் அடிப்படை இலட்சணமான தீர்மானமெடுத்தல் செயற்பாட்டினுள் போதுமான அளவு சதவீதம் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்தல் இன்றும் உலக நாடுகள் பலவற்றில் சவால் மிக்கதாக மாறியுள்ளது. பெண்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட மூன்றாவது பிரித்தானிய காலனித்துவ அரசு போன்றே உலகில் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய அரசாகிய இலங்கைக்கு கடந்த எட்டு தசாப்தங்களாக தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினுள் பெண்கள் பிரதிநிதித்துவத்தைப் போதியளவில் உறுதி செய்துகொள்வது பாரிய சவாலொன்றாக மாறியுள்ளது. பொருளியல், சமூக மற்றும் கலாச்சார செயற்பாடுகளினுள் இலங்கைப் பெண்கள் முன்னணி வகித்த போதிலும், தொழிற்படு அரசியலில் பிரவேசித்தல் பெரும்பான்மையான பெண்களுக்கு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பாரிய சவாலொன்றாக மாறியுள்ளது. 2017 சனவரி முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கமைய பெண்கள் சட்டவாக்கத் துறையில் பிரதிநிதித்துவ அடிப்படையில் இலங்கை 179 ஆம் இடத்தில் காணப்படுகின்றது. அப்போது இலங்கையில் பெண் பாராளுமன்ற பிரதிநிதித்துவ சதவீதம் 5.8 சதவீதமாக காணப்பட்டதோடு அது சமகாலத்தில் 5.3 வரை குறைவடைந்துள்ளது. இது உலகில் ஏனைய நாடுகள் போன்றே ஆசிய வலய நாடுகளோடு ஒப்பிடும் போது ஆகக் குறைந்த ஒரு பெறுமானமாகும்.

| நிலை | நாடு | பிரதிநிதித்துவ உறுப்பினர் அல்லது தனிச் சபை பாராளுமன்றம் | | உயர் உறுப்பினர் சபை | |
|---|---|---|---|---|---|
| | | பெண்கள் % | பெண்கள்/ ஆசனங்கள் | பெண்கள் % | பெண்கள்/ ஆசனங்கள் |
| 1 | ருவன்டா | 61.3 | 49/80 | 38.5 | 10/26 |
| 2 | பொலிவியா | 53.1 | 69/130 | 47.2 | 17/36 |
| 3 | கியூபா | 48.9 | 299/612 | – | – |
| 4 | ஐஸ்லாந்து | 47.6 | 30/63 | – | – |
| 5 | நிகரகுவாவ | 45.7 | 42/92 | – | – |
| 6 | சுவீடன் | 43.6 | 152/349 | – | – |
| 10 | தென் ஆபிரிக்கா | 42.0 | 167/398 | 35.2 | 19/54 |
| 23 | ஜேர்மன் | 37.0 | 233/630 | 39.1 | 27/69 |
| 47 | ஐக்கிய இராச்சியம் | 30.0 | 195/650 | 25.8 | 209/809 |
| 48 | நேபாளம் | 29.6 | 176/595 | – | – |
| 89 | பாகிஸ்தான் | 20.6 | 70/340 | 18.3 | 19/104 |
| 148 | இந்தியா | 11.8 | 64/542 | 11.0 | 27/245 |
| 179 | இலங்கை | 5.8 | 13*/225 | – | – |




இலங்கையின் தேசிய அரசியலில் காணப்படும் இந்த நிலைமையை மாகாண மற்றும் பிரதேச நிருவாகங்களோடு ஒப்பிடுகின்ற போது இன்னும் கீழ் மட்டத்தில் காணப்படுவதால் பிரதேச நிருவாகத்தினுள் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் உபாயமொன்றாக உள்ளூர் அதிகார சபைகளினுள் 25% பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது. நிச்சயமாக பெண்களுக்காக 25% ஐ குறித்தொதுக்கப்பட்ட ஆசனங்களை நிரப்புவதற்குப் பதிலாக 2012 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட கலப்பு விகிதாசார முறையில் செய்யப்பட்ட திருத்தமொன்றின் மூலம் எளிய பெரும்பான்மை முறையின் கீழ் வட்டார மட்டத்தில் தேர்தலில் போட்டியிடுதல் மற்றும் விகிதாசார முறையில் மேலதிகப் பட்டியல் ஆகிய இரு முறைகளில் பெண்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாக நியமனம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளமையை இங்கு காணமுடியும். அதற்காக வட்டார மட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர் பெயர் பட்டியலில் 10% பெண்களின் பெயர்களை உட்சேரப்பதற்கும், மேலதிகப் பட்டியலில் 50% பெண்களின் பெயர்களை உட்சேர்ப்பதற்கும் சட்ட ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டமையூடாக அரசியல் கட்சிகள் பெண்கள் பிரதிநிதித்துவத்தை வலுவூட்டுவதற்கான பொறுப்புக்குட்பட்டுக் காணப்பட்ட போதிலும், உள்ளூர் அதிகார சபைகளுக்கு 25% பெண்களின் பிரதிநிதித்துவத்தை தேர்ந்தெடுத்து அல்லது பெயர்குறித்து உறுதி செய்யும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தேர்தல் சட்டங்களின் மூலம் பெண்களை நியமனம் செய்யும் போது அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் 65 அ அ 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகள் காரணமாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு நடைமுறை ரீதியில் முகம் கொடுக்க நேரிட்டுள்ள சிரமங்கள் தொடர்பில் சட்ட வரைஞர்களின் முறையான அவதானம் செலுத்தப்படாத நிலமையொன்றைக் காணமுடிகிறது. இன் நிலைமை காரணமாக அண்மையில் இடம்பெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் பின்னர் 15 சபைகள் வரையில் 25% பெண்கள் பிரதிநிதித்துவ மட்டத்தை உறுதி செய்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இருப்பினும் இதுவரை உள்ளூர் அதிகார சபைகளின் 1.9% பெண்கள் பிரதிநிதித்துவத்தை சில சிரமங்களோடேனும் 25% வரை கொண்டு செல்வதற்கு சாத்தியம் கிடைத்தமை இந்தநாட்டின் சனநாயகத்தின் விசேட விருத்தியொன்றாகும் அதற்கமைய 2018 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது 1919 பெண்கள் மக்கள் பிரதிநிதிகளாக பிரதேச அபிவிருத்தியில் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யவுள்ளனர். இங்கு விசேட விருத்தியாதெனில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது பெரும்பாலான உள்ளூர் அதிகார சபைகளினுள் 10% க்கு அண்மித்த பெண்கள் தேர்தலில் வட்டார மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டமையாகும். இது பெண்களுக்கு எதிர்காலத்தில் தொழிற்படு அரசிலில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பொன்றாக அமையும்.




அரசின் தீர்மானங்களையெடுக்கும் செயற்பாட்டின் கீழ் மட்டமான உள்ளூர் அதிகார சபையினுள் பெண்களின் பிரதிநிதித்துவம் வலுப்பெறுவதன் மூலம் அச்செயற்பாடுகள் மிகவும் சனநாயகத் தன்மை கொண்டதாக அமையும் என்பது பெரும்பான்மையோரின் நம்பிக்கையாகும். உள்ளூர் அதிகார சபைகளில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் நேரடிப் பயன்பெறுநர்கள் பெண்கள் என்பதால் அத்தீர்மானங்களில் வினைத்திறன் மற்றும் நடைமுறைச்சாத்தியம் என்பவற்றை உயர்த்துவது தொடர்பில் இந்தப் பெண் பிரதிநிதிகளுக்கு கூடிய பங்களிப்பொன்றை வழங்குவதற்குப் போன்றே சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களின் குரலை குறைந்த மட்டத்திலேனும் பிரதிநிதித்துவம் செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதே போன்று இந்த விருத்தி காரணமாக பெண்களுக்கு அரசியல் கட்சிகளின் கீழ் மட்டத்தில் தமது திறன்களை மேம்படுத்துவதனூடாகவும் மற்றும் வெளிக்காட்டுவதனூடாகவும் தேசிய அரசியலில் தமக்கென ஓர் இடத்தை வகுத்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கும். எவ்வாறாயினும் அரசியல் கட்சிகள் காத்திரமான வாய்ப்புக்களை ஆற்றல் கொண்ட பெண்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணிக்கின்ற விடயத்தின் அடிப்படையில் இந்த முழு மொத்த எதிர்பார்ப்பின் வெற்றி தங்கியுள்ளது.

**- சட்டத்தரணி டீ.எம்.திசாநாயக்க**









# உள்ளூராட்சி நிறுவனங்களின் - பரிணாமம்

அரசியல் யாப்புக்களின் திருத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல்களின் போது, அரச கட்டமைப்பு மற்றும் மக்களை வலுவூட்டுதல் என்பன பிரதான விடயங்களாகும். இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம், 'மக்கள் இறைமை' மக்களுக்கு உரியதெனில், அது அவர்களின் அபிலாஷைகள், தேவைப்பாடுகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுத்தப்படல் வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. அரசியல் சுதந்திரத்தின் பின்னர் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்கள் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடிந்துள்ளதா? என்பதும் மற்றும் மிகவும் அர்த்தமுள்ளதும் மற்றும் செயற்றிறன்மிக்கதுமான முறையில் மக்களது தேவைகளை உள்ளடக்கும் விதத்திலான அமைப்பு முறையொன்று தொடர்பாக விவாதிக்கப்பட்டவன்னமுள்ளன. மக்களின் அடிப்படையான நிருவாக நிறுவனமாகிய 'உள்ளூர் அதிகார சபை' முறைமை அது நடைமுறைப்படுத்தப்பட்ட முறை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது மேற்கூறப்பட்ட வாதங்களுக்கு வலுவூட்டுவதற்கான ஒரு முயற்சியாகும்.

## உள்ளூராட்சியின் வரலாறு

இலங்கையில் நடைமுறையில் இருந்த உள்ளூர் அதிகார சபை முறைகள் தொடர்பான கருத்துத் தெளிவொன்றை பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் அடிப்படையான ஆவணங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

### 1.கல்வெட்டுக்கள்

I. மஹியங்கனை ஹோபிட்டிகம பலகைச் சாசனம் (கி.பி. 942 – 952) – உதய என்னும் மன்னன், ஹோபிட்டிகம பிரதேசத்தை நிருவகித்த உத்தியோகத்தர்கள் வரி அறவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது முறைகேடாக செயற்பட்டார்கள் என அவ்வூர் மக்கள் அங்கு வருகை தந்த மன்னனிடம் முறையிட்டனர். அரச அலுவலர்கள், வர்த்தகர்கள், குடியிருப்பாளர்கள் என்போர் கடைப்பிடிக்க வேண்டிய சட்டஒழுங்குகள் (உதாரணத்திற்கு வர்த்தக விடுமுறை, நிறுத்தல் அளவைப் பாவனைகள்) மற்றும் அவற்றைச் செயற்படுத்தும் முறைகள் என்பன தொடர்பாக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

II. வேவல்கெட்டிய கல்வெட்டு (கி.பி. 953 – 969) – மகிந்த மன்னன் – இங்கு 'தசகம்' என்னும் முறையிலான நிருவாகமுறை பற்றி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு பத்துக் கிராமங்கள் என்பது பத்து கிராமங்கள் ஒன்று சேர்ந்ததொரு நிருவாக அலகாக காணப்பட்டதோடு, அதன் நிருவாகம் கிராமத்தின் மூத்த நபரிடம் கையளிக்கப்பட்டிருந்ததோடு, பத்துக் கிராமங்களும் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. (பத்துக் கிராமங்களுக்கு ஒரு தலைவர்) குற்றங்கள், தவறுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகளைக் கைது செய்வது கிராமத்தவரின் கூட்டுப் பொறுப்பாகும் எனவும், அவ்வாறு செய்யத் தவறுமிடத்து ஒட்டு மொத்த கிராமத்தவருக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்களில் "நகர வட்டத்தீ" என்பவர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது ஒரு கட்டிடக் கலைஞர் பதவிக்குச் சமமானதொரு பதவி என பேராசிரியர் பரணவித்தான அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேராசிரியர் பரணவித்தான அவர்கள் குறிப்பிடுவதாவது, கல்வெட்டுக்களில் 'புரகமட்ட' எனக் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை சமஸ்கிருத மொழியில் 'புரகர்மஸ்த' என்னும் வார்த்தையிலிருந்து மருவி வந்ததாகவும் கூறுகின்றார். அதன் அர்த்தம் மாநகர கடமைகளில் ஈடுபடுவோர் என்பதும், தற்போதைய மாநகர ஆணையாளர் பதவிக்குச் சமமானதொரு பதவியாகவும் அது கருதப்படுகின்றது.

### 2.மகாவம்சம்

விஜய என்னும் மன்னனுடன் இங்கு வருகை தந்த அவனது அமைச்சர்களின் பெயர்களில் கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றிற்குப் பெயர் சூட்டப்பட்டதாக மகாவம்சம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பண்டுகாபய என்னும் மன்னன் (கி.மு. 377 – 307) இலங்கையிலுள்ள கிராமங்களின் எல்லைகளை வரையறை செய்ததாக அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டுகாபய மன்னன் கிராமங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு நடவடிக்கையெடுத்தது, ஏற்கனவே சில கிராமங்கள் எல்லை வரையறையின் அடிப்படையில் நிருவாகம் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் காணப்பட்ட காரணத்தினாலேயே என மற்றுமொரு கருத்தும் நிலவுகின்றது.

நகர நிருவாகத்திற்காக 'நகர குத்திக' என்ற ஒரு பதவி காணப்பட்டதோடு அது தற்போதைய மாநகர முதல்வர் பதவிக்குச் சமமானதாகும்.

### 3.ஆவணக் கட்டுரைகள்

மன்னனின் பதவிக்கு மற்றும் கிராமத் தலைவர்களை உள்ளடக்கிய வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் ஒரு நிறுவனம் தொடர்பாக றொபட் நொக்ஸ் (1681) என்பவர் வெளியிட்டுள்ள விபரங்களின் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை 'கொம் சொப்பி' (கிராம சபை) என அழைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் ஏனைய பொது சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனபதும் அவரது ஆவணங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மேஜர் ஹோப்ஸ் (1840)

கிராம சபைகள் மற்றும் ரட்ட சபை ஆகியவற்றின் கட்டமைப்புத் தொடர்பாக விபரித்துள்ள மேஜர் ஹோப்ஸ் அவர்கள், மிக உறுதியான அரச நிருவாகமொன்றினுள் இவ்வாறான சுயாதீன நிறுவனங்கள் காணப்படுதல் தொடர்பில் தமது வியப்பை வெளிப்படுத்தியுள்ளார். அனைத்துக் குடும்பங்களினதும் (சமூக அந்தஸ்தினைக் கருத்திற் கொள்ளாது) குடும்பத் தலைவர்கள் உள்ளடங்கும் வகையில் இந்தக் கிராம சபைகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அச்சபைகள் மூலம், மாவட்ட சபைகளுக்கும், மற்றும் ரட்ட சபைக்கும் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடிந்தது. அனைத்து பற்றுக்களிலிருந்து நியமனம் செய்யப்பட்ட அறிஞர்களிலிருந்து மாவட்ட சபை உருவாக்கப்பட்டது. மத்திய காலத்தில் பாரிய பிரதேசமொன்றுக்காக "நாட்டு சபை" காணப்பட்டுள்ளது.

### உள்ளூர் அதிகார சபைகள் நிறுவனங்களின் சட்டரீதியான பரம்பல் - முக்கியமான சந்தர்ப்பங்கள்

- 1818 – மலைநாட்டு வெளிப்படுத்துகை பிரகாரம், கிராம சபை முறை இல்லாதொழிதல் மற்றும் புதிய நிருவாக முறையும், நீதிமன்ற முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- 1833 – 05 மாகாணங்களாக வகுக்கப்பட்டு மாகாண அரசாங்க அதிபர்களின் கீழான நிருவாகம்
- 1833 – நீதிமன்றக் கட்டளைகளின் பிரகாரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, கிராம சபைகளுக்குச் செல்வதற்கான தடைகள் ஏற்படாதவாறான ஒரு பிரிவு மாத்திரம் உள்ளடக்கப்பட்டது.
- 1848 – மாவட்டங்களின் எண்ணிக்கை 19 ஆக மாற்றப்பட்டது.
- 1856 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நீர்ப்பாசம் தொடர்பான கட்டளைச் சட்டம்
- 1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாணப் பெருந்தெருக்கள் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்
- 1865 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்
- (1865 ஆம் ஆண்டில் கொழும்பு, கண்டி மாநகர சபைகள் தாபிக்கப்பட்டது.)
- 1931 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க மற்றும் 1933 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க குறித்த சபைகளின் அங்கத்தவர் நியமனம் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட கட்டளைச் சட்டம்
- 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம செயற்குழு சபைகள் கட்டளைச் சட்டம்
- 1892 ஆம் ஆண்டின் சுகாதாரம் பாதுகாப்புச் சபைக் கட்டளைச் சட்டம் (பட்டிண சபைகளுக்கான)
- 1898 ஆம் ஆண்டின் சுகாதாரம் மற்றும் அபிவிருத்திகளுக்கான மாகாண சபைகள் சட்டம்
- 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டம் / மாகாண சபைகள் கட்டளைச் சட்டம். (மாவட்ட உள்ளூர் நிருவாகத்திற்கான சபை முறை மாநகர சபைப் பிரதேசம் நீங்கலாக)
- 1924 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கிராமிய பிரஜைகள் தொடர்பான சட்டம்
- 1946 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பட்டிண சபைகள் கட்டளைச் சட்டம்
- 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்
- 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபை நிருவாகப் பிரதேசங்கள் கட்டளைச் சட்டம்
- 1952 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைகளின் உள்ளூர் அதிகாரப் பரவலாக்கல் சட்டம்
- 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வருமானங்களைச் சேகரிக்கும் அதிகாரத்தை அலுவலர்களுக்கு கையளித்தல்
- 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்களுக்கு வருடாந்த வரவு செலவுகள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள் என்பவற்றை அங்கீகரிக்கும் அதிகாரம் கிடைக்கப்பெறல்
- 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட ஒழுங்கமைப்புச் சபைகள் சட்டம்
- 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்
- 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் தாபித்தல் சட்டம்

### 1833

இதுவரை பல்வேறு நிறுவனக் கட்டமைப்புக்களினூடாக செயற்படுத்தப்பட்ட நிருவாக முறையானது செலவு கூடிய ஒரு முறை போன்றே, ஒற்றையாட்சியின் கீழ் இலகுவாக நிருவாகத்தை மேற்கொள்ளும் நோக்குடன் கோல்புரூக் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய இலங்கை 05 மாகாணங்களாக வகுக்கப்பட்டன. இதற்காக பயன்படுத்தப்பட்ட பூகோள ரீதியான, சமூக ரீதியான அல்லது வேறு தர்க்க ரீதியான அடிப்படையொன்று காட்டப்படவில்லை. இதன் பிரகாரம் மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், கிழக்கு மாகாணம், வட மாகாணம் என ஐந்து மாகாணங்கள் தாபிக்கப்பட்டதோடு பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக, மாகாணங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தேவைப்பாடு காரணமாக 1845 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணமும், 1873 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாணமும், 1886 ஆம் ஆண்டில் ஊவா மாகாணமும், 1889 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணமும் என்றவாறு மாகாணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இதற்கமைய மாகாணங்களின் எண்ணிக்கை 09 ஆக மாற்றமடைந்தது.

### 1856 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நீர்ப்பாசனத் துறை தொடர்பான கட்டளைச் சட்டம்

பிரித்தானியர்கள் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது, நடைமுறையில் இருந்த "கிராம சபை" கட்டமைப்பினை ஒத்த நிறுவனமாக நீர்ப்பாசனத் துறைக்கான கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. நீர்ப்பாசனத்தைப் பராமரித்தல், நீர் விநியோகம் செய்தல், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பல்வேறு சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், அவற்றைச் செயற்படுத்துதல் போன்ற விடயங்களை அமுல்படுத்தும் நோக்குடன் மேற்படி சட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாறான விடயங்களைச் செயற்படுத்துவது கட்டாயப்படுத்தப்படாமையும், (பலவந்தப்படுத்துதல்) விரும்பியவர்கள் இவற்றைச் செயற்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டமையும் இச்சட்டத்தில் காணப்படும் விசேட அம்சங்களாகும். நுவர, கலாவிய, பதுளை, தென் மாகாணம், சத் கோறளை ஆகிய பிரதேசங்களில் இந்த குழுக்கள் செயல்பட்டன.








1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாணப் பெருந்தெருக்கள் குழு கட்டளைச் சட்டம் இச் சட்டத்தின் மூலம் பழைமை வாய்ந்த 'வெல்விதானை' என்னும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வெல்விதானை என்பவர் கிராம சபைகளில் உள்ள மக்களது சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவரது பணிப்பொறுப்பாகும்.

1865 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் கொழும்பு, கண்டி மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசங்கள் இதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1866 ஆம் ஆண்டில் காலி மாநகர சபையும் ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்கும், அவர்களது பிரதேசங்களின் சுயாட்சி தொடர்பான கொள்கைகளை உள்ளூர் அதிகாரப் பிரதேசங்களில் விரிவாகச் செயற்படுத்துவதற்கு இந்த நிறுவனங்களுக்கு நேரிட்டது.

1936 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபைக்கெனத் தனியானதொரு நியதிச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதுடன், அவ்வாறு கண்டி, காலி மாநகர சபைகளில் 1938 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. 1941 ஆம் ஆண்டில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபை கட்டளைச் சட்டம் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டன. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு 1947 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை மொத்தமாக 40 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1948 ஆம் ஆண்டில் 03 மாநகர சபைகள் மாத்திரமே இருந்ததுடன், 1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், குருநாகல், நுவரெலியா ஆகிய நகர சபைகள், மாநகர சபைகளாக தரம் உயர்த்தப்பட்டன. அத்துடன் நீர்கொழும்பு என்னும் மாநகர சபையும் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் தெஹிவளை, கல்கிஸ்சை, இரத்தினபுரி, பதுளை, மட்டக்களப்பு, மாத்தளை, மொறட்டுவை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஆகிய மாநகர சபைகளும் உருவாக்கப்பட்டதுடன் மொத்தமாக 14 மாநகர சபைகள் காணப்பட்டன. இவற்றுள் 05 மாநகர சபைகள் மேல் மாகாண சபைப் பிரதேசத்தினுள் அமையப்பெற்றுள்ளன. தற்போது இந்த மாநகர சபைகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளன.

### 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம செயற்குழு சபைகள் கட்டளைச் சட்டம்

இந்தச் சட்டத்தின் மூலம் கிராமங்களின் பொதுத் தேவைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாதைகள் அமைத்தல், மரக்குற்றிப் பாலங்கள் மற்றும் பாலங்கள் அமைத்தல். அவற்றைப் பராமரித்தல், பிள்ளைகளுக்கு கல்வியறிவு வழங்குதல், பண்ணை வளர்ப்பு, புற்றரைகளைப் பேணுதல், பழைமையான சம்பிரதாயங்களைச் செயற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் இவற்றுள் அடங்குகின்றன. குறித்த பிரதேசத்தில் உள்ள 10 பேர் அடங்கிய குழுவினரின் வேண்டுகோளின் பிரகாரம், ஒரு பொதுக்கூட்டத்தை நடாத்தமுடியுமென்பதோடு, அதற்காக கூட்டம் நடாத்துவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் கூட்டம் நடாத்தப்படும் எனவும் மற்றும் இடம், திகதி, நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை பிரதேசம் முழுவதும் வெளியிடுதல் வேண்டும். இவ்வாறான கூட்டத்திற்குச் சமுகமளிக்கும் அப்பிரதேசத்தின் நிரந்தர வதிவாளர்களான 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், குறித்த கூட்டத் தினத்திற்கு முன்னரான 05 வருடத்தினுள் நீதிமன்றத்தினால் எதுவித தண்டனைகளுக்கும் ஆளாகாதவர்களாகவும் இருந்த அனைவருக்கும் வாக்களிப்பதற்கான உரிமை கிடைக்கப்பெற்றது. எவ்வாறாயினும், 25 வயதினைப் பூர்த்தி செய்தவர்களாகவும். தனது பெயரிலோ அல்லது தனது மனைவியின் பெயரிலோ 200 ரூபாவிற்கு மேற்பட்ட சொத்துக்களை உடையவராகவும், அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படாதவராகவும் இருத்தல் வேண்டுமென்பது குறித்த கிராம சபைக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்குரிய தகைமைகளாகக் கருதப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும். இந்தக் கிராம சபைகள் 05 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், இது ஒரு நீதிமன்றமாகவும் செயற்படுகின்றது. இச் சபைக்கான தவிசாளரை ஆளுநர் நியமிப்பதுடன், ஏனைய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக திருவுளச்சீட்டிலுப்பின் மூலம் ஏனைய அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த முறையானது, தற்போதைய ஜூரி சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யப்படும் முறையை ஒத்ததாக அமைந்திருக்கும். ஒரு குற்றத்திற்கு தண்டனை வழங்கும்போது ஆகக்கூடிய அபராதமாக 20 ரூபா அறவிடப்படுகின்றது. 1884 ஆம் ஆண்டிலிருந்து கிராம சபைத் தவிசாளராகப் பதவி வகித்தவர் பெரும்பாலும் (கம்முலாதேனி) எனப்படும் பிரதான கிராமத் தலைவராக இருந்த போதும், இந்த நடைமுறை வெற்றிகரமானதாக அமையவில்லை.

### 1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேணல் சபை கட்டளைச் சட்டம்

சிறிய நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் இயங்கும் இச்சபைக்கு அரச வேலைத் திணைக்களத்தின் உறுப்பினர்களும், சுகாதாரத் திணைக்களத்தின் உறுப்பினர்களும், ஆளுநரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளடங்குவர். 1928 ஆம் ஆண்டில் 110 கிராமங்களை உள்ளடக்கியதான 19 சுகாதாரம் பேணல் சபைகள் இயங்கியதாக டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் சட்டம்

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான உள்ளூர் சபைகள் நிறுவப்பட்டு இருந்ததுடன், இச்சபைகள் சுகாதாரம் பேணல் சபைகளை ஒத்ததாகவும், அதே நடைமுறையிலான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. இச்சபைகளின் உத்தியோகபூர்வ தவிசாளராக அரசாங்க அதிபர் கடமையாற்றியதுடன், உத்தியோகபூர்வமாகவும், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுமாகிய உறுப்பினர் குழுவும் இதில் உள்ளடக்கப்பட்டு இருந்தனர். 1928 ஆம் ஆண்டில் மொத்தமாக 13 உள்ளூர் சபைகள் செயற்பட்டதாக அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளன.

### 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள்

மாநகர சபைகள் அல்லாத ஏனைய பிரதேசங்களுக்கென 'மாவட்ட சபை' எனப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது. நகர மாவட்ட சபைகள், பொது மாவட்ட சபைகள், கிராமிய மாவட்ட சபைகள் என மூன்று வகையான மாவட்ட சபைகள் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இச்சபைகள் பொதுமக்களின் விருப்பத்தின் பிரகாரம் நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்த மாவட்ட சபைகளின செயற்பாடுகள் பற்றித் தீர்மானிக்குமிடத்து, பிரதேசத்திலுள்ள மக்கள் தொகை, அபிவிருத்தியின் அளவு போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன. சுகாதாரம் பேணல் சபைகள், மாகாண அரச சபைகள் ஆகியவற்றினால் நிருவகிக்கப்பட முடியாத ஏனைய பிரதேசங்களில் இந்த மாவட்ட சபைகள் நிறுவப்பட்டன. நகர சபைகள் ஊடாக முன்னேறி வரும் கிராமங்கள் நாகரிக மட்டத்தில் அபிவிருத்தி பெறும் கிராமங்கள் போன்றவற்றில் இந்த மாவட்ட சபைகள் நிறுவப்பட்டன. காடுகள் நிறைந்த பிரதேசமாக விளங்கிய, சனத்தொகை குறைந்த, வர்த்தக நடவடிக்கைகள் குறைந்த, பரந்தளவிலான சுகாதாரம் பேணல் முறைகள் அவசியமற்றதெனக் கருதப்படுகின்ற, போக்குவரத்து வசதிகள் அவசியமற்றதெனக் கருதப்படுகின்ற முன்னேற்றமடையாத பிரதேசங்களிலேயே கிராம சபைகள் நிறுவப்பட்டன. இச் சபைகளுக்கு உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் 04 பேரும், உத்தியோகப் பற்றற்ற 04 பேருமாக மொத்தம் 08 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த உறுப்பினர்களின் நியமனம் ஆளுநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதனை விட இந்த சபைகள் மத்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள், இடைக்காலச் சட்டங்களை அங்கீகரித்தல், மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விநியோகித்தல், நிறுவப்படவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக தனியானதொரு கட்டமைப்பு ஃ சபை 1921.06.15 ஆந் திகதி நிறுவப்பட்டது. இச் சபைகளுக்கு உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் 05 பேரும், உத்தியோகப் பற்றற்ற 04 பேரும் நியமிக்கப்பட்டனர்.

மக்களது விருப்பத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட இந்த சபைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் (1921–1931) பத்து வருட காலத்தினுள் பதினொரு நகர மாவட்ட சபைகள் மாத்திரமே நிறுவப்பட்டிருந்தன. இந்த நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கை அற்றுப்போன காரணத்தினால், பொது அல்லது கிராமிய மட்டத்திலான மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு இயலாமற் போனது.

### 1924 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கிராமிய பிரசைகள் தொடர்பான சட்டம்

இச் சட்டத்தின் மூலம் கம்முலாதேனி எனப்படும் கிராமத் தலைவரின் பிரிவு அல்லது ஒரு பகுதியை கிராம சபைப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கான அதிகாரம் ஆளுநருக்கும் குறித்த சபைக்கும் வழங்கப்பட்டிருந்தது. இந்த கிராம சபைப் பிரிவில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களோ உள்ளடங்கும் வகையில் உப பிரிவுகள் அமைக்கப்படுவதன் மூலமும், அப் பிரிவுகள் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படுவதன் மூலமும் கிராமிய செயற்குழுக்கள் நிறுவப்பட்டன. 1928 ஆம் ஆண்டில் 657 கிராமிய செயற்குழுக்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு உப பிரிவிலும் வதிவாளர்களாக இருக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் பங்குபற்றும் ஒரு கூட்டத்தினை நடாத்துவதற்கு பிரதேச அதிபர் அனுமதியளிப்பார். குறித்த கூட்டத் தினத்திற்கு முன்னரான 05 வருட காலத்தினுள் நீதிமன்றத்தினால் எதுவித தண்டனைகளுக்கும் ஆளாகாதவர்களாக இருந்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டதுடன், பெண்கள், ஐரோப்பியர்கள், பறங்கியர், தோட்டத் தொழிலாளர்கள் போன்றோருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை. திறந்த வாக்களிப்பு முறையில் 06 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதுடன், இவர்களது பதவிக் காலம் 03 வருடங்களாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் பரிணாமத்தின் விசேட சந்தர்ப்பங்கள்

- 1925 – அகில இலங்கை கிராம சபைச் சம்மேளனம் நிறுவுதல்
- 1929 – இச் சபையின் தவிசாளராக திரு. எஸ்.டப்ளிவ். ஆர்.டீ. பண்டாரநாயக்கா அவர்கள் நியமிக்கப்பட்டார்.
- 1931 – டொனமூர் ஆணைக்குழுவினால் பரிந்துரைகளை முன்வைத்தல்

டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், அரச மந்திரி சபையில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய 07 நிறைவேற்றுக் குழுக்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து உள்ளூராட்சிக்காக ஒதுக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஆளுநர் வசம் இருந்த அதிகாரம் மக்கள் உறுப்பினர்கள் வசம் சென்றடைந்தன.

### 1938 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க கிராமிய பிரஜைகள் தொடர்பான சட்டம்

01. ஒவ்வொரு பொலிஸ் பிரிவும், ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவாக அடையாளமிடப்பட்டு, கிராமிய செயற் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒரு கிராமிய செயற்குழுவுக்கு ஒரு வாக்கெடுப்புப் பிரிவிலிருந்து ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.
02. ஆண் பெண் பேதமின்றி சர்வஜன வாக்குரிமை யாவருக்கும் வழங்கப்பட்டது. தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுவதாயின், அவர் 200 ரூபாவுக்குக் குறையாத பெறுமதியுடைய சொத்துக்களுக்கு உரித்தானவராய் இருத்தல் வேண்டும்.
03. தமது வதிவினை உறுதிப்படுத்தும் தகைமையின்மை காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.
04. கிராமிய சபையானது, பொதுக் கட்டமைப்பின் கீழ் இடைவிடாத செயற்பாட்டில் உள்ள பொது தாபனமாக அமைந்துள்ளதுடன், சொத்துக்களை வைத்திருப்பதற்கும், வரிகளை அறவிடுவதற்கும், இடைக்காலக் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும் குறித்த சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
05. மெய் வரி (கட்டாய உழைப்பு) வரி முறையைச் செயற்படுத்தல், வரி அறவிடுதல், சேனைப் பயிர்ச் செய்கை செய்யப்படாத 05 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்திற்கு வரி அறவிடுதல் (ஒரு ஏக்கருக்கு 50 சதம்)
06. இடைக்காலச் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரத்தை அதிகரித்தல்
07. வருடாந்த கணக்காய்விற்கு இடமளித்தல்
08. முறைகேடான நிருவாகத்தினை மேற்கொள்ளும் உள்ளூராட்சி மன்றத்தினைக் கலைக்கும் அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்குதல்

### 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம்

இக் கட்டளைச் சட்டம் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் ஏற்கெனவே இருந்த யூ.டி.ஓ. எனப்படும் நிறுவனத்தின் கீழ்





இயங்கிய 27 கிராமங்கள் நகர சபைகளாக மாற்றப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் இந்த உள்ளூராட்சி மன்றங்களை உள்ளூர் ஆட்சிச் சபைகள் எனப் பெயரிட்டு அழைத்திருந்தனர். பெயர்ப்பலகைகளிலும் இந்தப் பெயரே பொறிக்கப்பட்டிருந்தன. 1939 – 1977 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கான 44 திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தச் சபைகளின் தவிசாளர் பதவி உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபருக்கு உரியதாக இருந்த காரணத்தினால், அதற்குப் பதிலாக தேர்தல் மூலம் ஒரு தவிசாளரைத் தேர்ந்தெடுக்கும் வகையில் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 – 12 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கைக்கு வரையறுக்கப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 100 ரூபாவிற்குக் குறையாத சொத்துக்களுக்கு உரித்துடையவர்களுக்கும் மாத்திரமே வாக்களிக்கும் உரிமை இருந்துள்ளது.

## 1946 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம்

இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர், சுகாதாரம் பேணல் சபைகளின் கீழ் இயங்கிய 24 கிராமங்கள் பட்டிண சபைகளாக மாற்றப்பட்டன. நகர சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதே அதிகாரங்கள் இவற்றிற்கும் வழங்கப்பட்டிருந்த்துடன், உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 – 8 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கைக்கு வரையறுக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் அபிவிருத்தி சபைகளுக்கு பட்டிண சபைகளை கையளிக்கும் போது 83 பட்டிண சபைகள் நடைமுறையில் காணப்பட்டன.

## 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைகள் சட்டம்

கிராமிய செயற்குழுக்களில் கடமையாற்றிய ஊழியர்கள் உள்ளூராட்சிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு உள்ளீர்க்கப்பட்டனர்.

## 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

மாநகர சபைகள், நகர சபைகள், கிராம சபைகள் ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் முறைகள் தேர்தல் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. வாக்காளர் இடாப்புக்கள் தயாரித்தல், வாக்காளர்களினதும், வேட்பாளர்களினதும் தகைமைகள், தேர்தல்களுக்கான செலவுகள், தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டிய முறைகள் தொடர்பான மத்திய அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகள் யாவும் பொதுவாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஏற்புடையவாறு செயல்வலுவாக்கம் செய்யப்பட்டன.

## 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிருவாகப் பிரதேசங்கள்

கிராமிய செயற்குழுக்கள் யாவும் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழும் கொண்டு வரப்பட்டன.

1947 ஆம் ஆண்டில் கிராம சபைகளால் செயற்படுத்தப்பட்ட 'மெய் வரி' இல்லாதொழிக்கப்பட்டதுடன், அதற்குப் பதிலாக அதற்குரிய நிதி மத்திய அரசாங்கத்தினால் கிராமிய செயற்குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

## 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம்

கிராம சபைகள் மற்றும் பட்டிண சபைகள் சட்டத்தின் கீழ் இருந்த அதிகாரங்கள் சகிதம் இவ்விரண்டு நிறுவனங்களினதும் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் வகையிலும் அமைந்த மாவட்ட அபிவிருத்திச் சபை எனப்படும் புதியதொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்குவதுடன், அந்த எண்ணிக்கையில் ஒன்று குறைக்கப்பட்ட எண்ணிக்கையான மக்கள் உறுப்பினர்களைத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள். 1981.07.01 ஆந் திகதி 24 மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அதிகாரங்களுடன், அன்றைய காலகட்ட 11 அமைச்சுக்களுக்குரிய 15 அபிவிருத்தித் திட்டங்களும் கையளிக்கப்பட்டன. குறித்த மாவட்டங்களில் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் 'அபிவிருத்திச் சபை உப அலுவலகம்' எனப் பெயரிடப்பட்டன. 549 கிராம சபைகளும், 83 பட்டிண சபைகளும் இதன் மூலம் இல்லாதொழிக்கப்பட்டன. இவற்றில் 7781 உறுப்பினர்கள் அடங்கியிருந்ததுடன், இவற்றுள் 156 பேர் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆவர்.

## கிராமோதய சபைகள்

மேற்குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட 'கிராமோதய சபைகள் முறை' ஜனநாயகத் தன்மை கொண்டதும், செயற்றிறன் குறைந்த முறையாகவும் காணப்பட்டதுடன், பட்டிண சபைகள், கிராம சபைகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பக்கூடியதான வகையில் அமைந்திருக்கவுமில்லை.

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

உள்ளூராட்சி மன்றங்களில் முறையானதொரு உறுப்புரிமை முறைமை இல்லாதிருந்த காரணத்தினாலும், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மற்றும் கிராமோதய சபைகளினால் குறித்த விடயங்கள் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பிரதேச சபைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச் சட்டம் 1987.04.16 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டபோது, சிறந்ததொரு உள்ளூராட்சி முறையை உருவாக்குவதற்கும், அதற்குரிய உள்ளூராட்சிச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் கிராமங்களிலுள்ள இளைஞர்களின் தலைமைத்துவம் அவசியமானதாகக் கருதப்பட்டது. பிரதேச சபைகளினூடாக அரசியற் பொறுப்புக்களை ஏற்று நடாத்துவதற்குரிய பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கும் நோக்குடன், இவ்வாறான நிறுவனக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதெனக் கூறப்பட்டது. மொறகொட ஆணைக்குழுவின் பரிந்துரையும் இதன் போது கவனத்திற் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இதன் பிரகாரம் (பிரதேச செயலாளர்) உப அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட கிராம சபைகள் அல்லது பட்டிண சபைகள் ஆகிய இரண்டும் ஒரே பிரிவின் கீழ் அமையுமாறு, பிரதேச சபைகள் என்னும் பெயரில் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மேற் குறித்த கிராம சபைகள், பட்டிண சபைகளின் அதிகாரங்கள் யாவும் பிரதேச சபைகளுக்குக் கையளிக்கப்பட்டன.

## 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிருவாக அதிகாரம் மற்றும் மேற்பார்வை அதிகாரம் போன்ற பெருமளவு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் கீழ் தக்க வைக்கப்பட்டுள்ளன. இந்த மாகாண சபைகளுக்கு இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் தொடர்பான கட்டளைகள் தயாரிக்கப்படும் போது, குறித்த கட்டளைகளை உரிய பிரதேசத்தினுள் செயற்படுத்தும் உரிமைகள் காணப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை இணைப்பதற்கும் முடியுமான வகையில் இச்சட்டம் அமைந்துள்ளதுடன், அதற்காக குறித்த மாகாணங்களின் மக்கள் அபிப்பிராயம் தேர்தல் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவற்றுள் ஒரு மாகாணமேனும் தமது அதிருப்தியைத் தெரிவித்தால் குறித்த இணைப்பு செயற்படுத்தப்பட மாட்டாது. மக்கள் அபிப்பிராயத்தின் மூலம் மாகாணங்கள் இணைக்கப்பட்டால், ஒரு தனி மாகாணமாக அமைக்கப்பட்டு ஒரு முதலமைச்சரின் கீழ் ஒரு மாகாண அமைச்சரவையின் கீழ் நிருவாகத்தை மேற்கொள்ளப்படும்.

## தொகுப்பு

இலங்கையில் கடந்த கால வரலாற்றில் அதிகார பரவலாக்கக் கட்டமைப்புக்கள் இருந்தமைக்கான சான்றுகளும், மன்னர் ஆட்சிக் காலங்களில் இருந்தே குறித்த நடைமுறைகள் இருந்து வந்துள்ளமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன. பதுளை கற்றூண் சாசனம், 11 ஆம் உதய மன்னனது ஹோபிட்டிகம கல்வெட்டு என்பவை இதனை உறுதிப்படுத்தும் சான்றுகளாக அமைந்துள்ளன. கண்டி இராச்சியத்தின் நுவர கலாவிய, (கோறளை 05), கோறளை 07 ஆகிய பிரதேசங்களும், கிழக்கு மாகாணத்தில் தமன்கடுவ, பிம்தென்ன, வெல்லஸ்ஸ ஆகிய 03 கோறளைகளிலும் மேற்குறித்த முறையிலான நிருவாகம் அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. கண்டி இராச்சியத்திலுள்ள 21 பிரதேசங்களையும் தனித்தனியாக நிருவகித்துள்ளனர். இவ்வாறான நிருவாகப் பிரதேசங்களாக 04 மகா திசா பிரதேசங்களும், 09 பிரதான பிரதேசங்களும் இருந்துள்ளன. கோறளை 03, கோறளை 04, கோறளை 07, ஊவா, சப்ரகமுவ, மாத்தளை, வலப்பனை, உட பலாத்தை, நுவர கலாவிய, வெல்லஸ்ஸ, பிம்தென்ன, தமன்கடுவ ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் 'திசாவே' என்னும் பிரிவுகள் இருந்துள்ளன. கண்டி நகரத்தை அண்மித்த பிரதேசங்கள் 'ரட்ட' என அழைக்கப்பட்ட பிரிவுகளுக்கு உட்பட்டதாக அமைந்திருந்தன. உடுநுவர, யட்டிநுவர, தும்பனே, ஹாரிஸ்பத்து, தும்பறை ஹேவாஹெட்ட, கொத்மலை, உட புளத்கம, பாத்த புளத்கம போன்ற பிரதேசங்கள் மேற்குறிப்பிட்ட 'ரட்டவல்' என்னும் பிரிவின் கீழ் அமைந்திருந்தன. இப்பிரிவுகளின் நிறைவேற்று அதிகாரியாக 'ரட்டே மகத்தயா' என்பவர் கடமையாற்றியுள்ளார். கிராம சபைகளை விட மிகப்பெரிய ரட்ட சபா என்னும் கட்டமைப்பு இருந்துள்ளதுடன், இந்த ரட்ட சபாவில் மொஹொட்டால, லியன ரால, பத்தே ரால, உண்டியா ரால போன்ற உத்தியோகத்தர்கள் கடமையாற்றியுள்ளதுடன், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிராமத் தலைவர் கடமையாற்றியுள்ளார். இவர்களது கடமைகளில் சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன.

போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக் காலங்களின் போது இந்த அதிகாரப் பரவலாக்கம் ஏற்கெனவே இருந்தவாறு தொடரப்பட்ட போதும், பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அடிப்படையான விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1833 ஆம் ஆண்டில் கோல்புருக் மறுசீரமைப்புக்களின் போது குறைந்த செலவுடனும். நிருவாகத்தினை இலகுவான முறையிலும் மேற்கொள்ளும் நோக்குடன் சபைகளின் கட்டமைப்பு முறைகளை மாற்றியமைத்த காரணத்தினால், அவற்றில் 'ஒருமித்த' தன்மை காணப்பட்டது. பிரதேசங்களின் நிலைமை மற்றும் நிருவாகக் கட்டமைப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஏற்கெனவே இருந்த நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின் போது உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள பிரதேசங்கள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்வதில் சுயாதீனத் தனமை காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் கிராமங்களில் காணப்படும் சிறு சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதில் ஈடுபட்டதுடன், சுகாதாரம். பாதைகள், கழிவு நீர் வாய்க்கால், வீடுகள் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டன. அத்துடன் மிக முக்கியமாக நீர், மின்சாரம் போன்ற சேவைகளை வழங்குவதில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய பங்கினை வகித்து வந்தது. பிற்பட்ட காலங்களில் மத்திய அரசாங்கத்தின் கீழ் இவ்வாறான நடவடிக்கைகளை பல்வேறு நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட காரணத்தினால் பிரதேச நிருவாகத்திலிருந்து அவை நீக்கப்பட்டன. ஆயுர்வேத நிலையங்கள், வைத்தியசாலைகள் போன்றவையும் பிரதேச மட்டத்திலான நிருவாகத்திலிருந்து சிறிது சிறிதாக விடுபடும் நிலையில் காணப்பட்டன. மிகவும் உறுதியான உள்ளூராட்சி நிருவாக முறையின் கீழ் மக்கள் பிரதிநிதிகளுக்கு தீர்மானங்களை மேற்கொள்வதற்கும். பிரதேச அபிவிருத்திகளில் ஈடுபடுவதற்கும் அதிகாரம் இருந்த போதும் அவற்றின் நிதி அதிகாரம் மற்றும் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக ஆக்கப்பட்டுள்ளவர்களின் கைகளில் உள்ளதான அரசியல் நடவடிக்கைகள் காரணமாக உறுதியான உள்ளூராட்சி நிறுவனங்களை உருவாக்கும் சந்தர்ப்பங்கள் தவற விடப்படுகின்றன என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். மக்கள் வசமிருக்கும் அதிகாரத்தைச் செயற்படுத்தப்படுவதானால், அவர்களிடம் அதிகாரத்தைக் கையளித்தல் என்பது அவர்களது உரிமையாகும் எனக் கருதப்படுவதுடன், ஆட்சியாளர்களின் கருணை, இரக்கம், நல்லுள்ளம், நல்லாட்சி என்பவற்றில் தங்கியிருக்கவில்லை என்பதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டியது சிறந்த விடயமாகும்.

- **சட்டத்தரணி, நிமல் புஞ்சிஹேவா**
பணிப்பாளர் (சட்டம்),
தேர்தல் ஆணைக்குழு



# தேர்தல்கள் கண்காணிப்பு தொடர்பான ஓர் அவதானிப்பு

## உலகில் சவால்மிக்க சமகால வழிநடாத்தல் செயற்பாடுகள்

தேர்தலொன்று என்பது பௌதீக மற்றும் மனித வளங்கள் மிகப் பாரியளவில் ஈடுபடுத்தப்படுகின்ற குறுகிய கால வழிநடத்தல் ஒன்றாகும். அது சவால்மிக்க சமகால நடைமுறை (logistics) பணியொன்று போலவே உயர்ந்தபட்சமான பிழைகளற்ற மற்றும் வினைத்திறன் எதிர்பார்க்கப்பட்ட பாரிய அவதானமிக்க செயற்பாடொன்றாகும். அவ்வாறான செயற்பாடொன்றின் வெற்றியை அளவிடுவது அது எவ்வளவு தூரம் நேர்மை கொண்டாதாக (Integrity)நிறைவடைந்தது என்ற காரணத்தின் அடிப்படையிலாகும். தேர்தலொன்று நேர்மையானதாவென மதிப்பீடு செய்கின்ற அளவுகோள்கள் பல காணப்படுகின்றன. இருப்பினும் அவை அனைத்துக்கும் நேரொத்ததாக உலக மட்டத்தில் தேர்தலொன்று நீதியான மற்றும் சுதந்திரமானது என்பதை மதிப்பீடு செய்வதில் பெரும் தலையீடொன்றை செலுத்தக் கூடிய தரப்பொன்றாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்று என்பது தேர்தல் செயன்முறைகளின் பிரதனமான தரப்பொன்றாக அமைவதோடு, அண்மை காலமாக அவ்வமைப்புக்கள் விசேடமாக தேர்தல் செயன்முறைகளின் முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. பொதுவாக காணக்கூடிய சர்வதேச போக்காக அமைவது தேர்தல் கண்காணிப்பு இன்றி நடாத்தப்படுகின்ற தேர்தலொன்று நீதியானதென்பதை உறுதிசெய்வது தற்போது சிரமமான பணியொன்றாக மாறியுள்ளதென்பதாகும்.

மக்கள் இறைமையை பிரயோகிப்பதற்காக சனநாயக சமூகமொன்றில் பயன்படுத்துகின்ற வழிமுறை தேர்தலாகும். இந்த நாட்டிலும் அதில் மாற்றமொன்று இல்லை காணப்படுகின்ற மாற்றமொன்றாகவிருப்பது அது வரை விசேட சலுகையொன்றாக குறுகிய தரப்பினருக்கு உரித்தாகக் காணப்பட்ட வாக்குரிமையை சர்வசன வாக்குரிமையாக இந் நாட்டு மக்கள் இதற்கு 88 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்டமையாகும். அது அவ்வுரிமையை வெற்றிகொண்ட அரசுகளிடையே முன்நிலையில் இருந்து கொண்டு அன்று தொடக்கம் இன்று வரை இந்நாட்டில் நடாத்தப்பட்டுள்ள பொதுத் தேர்தல்களின் எண்ணிக்கை 16 ஆகும். அவற்றில் ஒரு மக்கள் தீர்ப்பையும் ஒன்று சேர்க்க வேண்டியுள்ளது. பொதுத் தேர்தலொன்றின் அளவில் கவனத்துக்குட்படுத்தப்படாத ஒரு தேர்தலாகும். உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் இம்முறை சிறிய அரசாங்க தேர்தலாக நடாத்தப்பட்ட இத்தேர்தலின் ஆர்வம் அதிகமாகக் காணப்பட்டது. புதிய தேர்தல் முறைமையொன்றுக்கு மாறியமை போன்றே பலவருட காலத் தாமதம் என்பன கவனம் தீவிரமடைவதில் செல்வாக்கு செலுத்திய அடிப்படைக் காரணங்களாக கருத முடியும்.

## தொழிற்படு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள்

இந்த நாட்டின் தேர்தல் கண்காணிப்புக்கு நீண்ட வரலாறொன்று காணப்படுவது போலவே அவ்வப்போது இடம்பெற்ற சிவில் சமூக தலையீடுகளின் பயனாக தேர்தல் கண்காணிப்பு அலுவல்கள், 1988 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலை தொடர்ந்தே மிகவும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டது. இன்று இந்த நாட்டில் செயற்படுகின்ற பல தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் காணப்படுகின்றன. இம்முறை தேர்தல் கண்காணிப்பில் உயிர்புடன் ஈடுபட்ட கண்காணிப்பு அமைப்புக்கள வருமாறு.

- நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
- தேர்தல் வண்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV)
- நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான அமைப்பு (CaFFE)
- தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் (NPOC)
- டிரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL)
- மனித உரிமைகளுக்கான கல்வியலாளர்களின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு (NEM-IHR)

இவற்றில் தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம், (CMEV) மற்றும் பெபரல் அமைப்பு என்பன தேர்தல் ஆணைக்குழுவின் முழுயான அனுமதியோடு தொழிற்படுகின்ற இரண்டு கண்காணிப்பு அமைப்புக்காளாகும். இதில் விசேடம் யாதெனில் அவ்விரு அமைப்புக்களுக்கும் தேர்தலொன்று நடாத்தப்படும் தினத்தில் நாட்டில் அமையப்பெற்றுள்ள எந்நவொறு வாக்கெடுப்பு நிலையத்தையும் கண்காணிப்பதற்காக தரித்து நின்று கண்காணிக்கக்கூடிய கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு அனுமதி காணப்படுவதாகும். இவ்விறு அமைப்புக்களும் இம்முறை வாக்கெடுப்புக்கு முன்னர், வாக்கெடுப்பு தினம் மற்றும் வாக்கெடுப்புக்கு பின்னர் ஆகிய மூன்று காலப்பகுதிகளையும் மையமாகக்கொண்டு கண்காணிப்புச்செயற்பாடுகளில் ஈடுபட்டன. இலங்கையின் அன்னையரும் மற்றும் புதல்வியரும் (MDL)அமைப்பு பெண்களை மாத்திரம் உள்ளடக்கிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்றாகும். இம்முறை அவர்கள் தேர்தல் கண்காணிப்பிலிருந்து விலகுவதற்கு காரணம் அந்த அமைப்பு பரந்த அளவில் பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதற்காக தேர்தல் கண்காணிப்புக்கு அப்பால் பல செயற்பாடுகளை மேற்கொண்டமையாகும்.

அதனோடு இணைந்ததாக இத்தேர்தலின் பிண்ணனியல் கட்டியெழுப்பப்பட்ட விசேட காரணங்கள் பல காணப்பட்டன. அதாவது,

- தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதை தொடர்ந்து நடாத்தப்படுகின்ற முதலாவது தேர்தலாக காணப்பட்டமை
- புதிய தேர்தல் முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை
- இலங்கை முழுவதிலும் உள்ளூர் அதிகார சபைகளுக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக ஒரே தடவையில் தேர்தல் நடாத்தப்பட்டமை
- பொலீஸ் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு அடங்களாக 19 ஆம் அரசியல் யாப்பு திருத்தத்தினால் குறித்த ஆணைக்குழுக்களின் நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முதலாவது தேர்தலாகக் காணப்பட்டமை
- இலங்கையின் தேர்தல் வரலாற்றில் எண்ணிக்கை அடிப்படையில் ஆகக் கூடுதலான வேட்பாளர்கள் ஒரே தடவையில் போட்டியிட்ட ஒரு தேர்தலாகக் காணப்பட்டமை.
- 25% கோட்டா மூலம் பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் சட்டமாக்கப்பட்ட பின்னணியில் 32% மான பெண் வேட்பாளர்கள் வட்டார மட்டத்திலும் மற்றும் விகிதாசார அடிப்படையில் (மேலதிகப் பட்டியல் மூலமும்) தேர்தலில் போட்டியிட்டமை

கட்டமைக்கப்பட்ட மற்றும் எண்ணிக்கை ரீதியான எந்த முறையில் ஆராய்ந்த போதும் இந் நாட்டில் 6ஆவது தடவையாக நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் அதற்கே உரித்தான சிறப்புக் கவனத்தோடு நடாத்தப்பட்டதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அதே போன்று அது தொடர்பில் வாக்காளர்களிடம் காணப்பட்ட ஆர்வமும் அதிகமாகும். வாக்களிப்பு சதவீதம் 72 ஆகும். இதற்கு 27 வருடங்களுக்கு முன்னர் நடாத்தப்பட்ட முதலாவது உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது 72% உயர்ந்தபட்ச வாக்களிப்பு சதவீதத்தின் பின்னர் ஆகக் கூடுதலான வாக்களிப்பு சதவீதம் அறிக்கையிடப்பட்ட ஒரேயொரு சந்தர்ப்பம் இதுவாகும். இம்முறை நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது PAFFREL மற்றும் CMEV ஆகிய இரண்டு அமைப்புக்களும் நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புப் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

## தேர்தல் கண்காணிப்பைத் திட்டமிடல்

கண்காணிப்பாளர்களை இணைப்புச் செய்யும் போது ஒவ்வொரு அமைப்புக்களும் தொழிற்படுவது தமக்கே உரித்தான வலையமைப்பினூடாகவென்பது விசேடமான அம்சமாகும். பெபரல் அமைப்பு சர்வோதய அமைப்பை முதன்மையாகக் கொண்டு நாடளாவிய தொண்டர் அமைப்பு அங்கத்தவர்களை தமது கண்காணிப்புக்காக ஈடுபடுத்தக் கொள்கின்ற போதிலும், CMEV ஒவ்வொரு தேர்தல்களின் போதும் குறித்த காலப்பகுதிக்காக தகமைகளின் அடிப்படையில் கண்காணிப்பாளர்களைத் தெரிவு செய்து கொள்கின்றது. அமைப்பொன்று அனுமதிக்கப்பட்ட நோக்கு மற்றும் பணிக்கூற்று என்பவற்றோடு முரண்படாத விதத்தில் தேர்தல் கண்காணிப்பை தொழில் ரீதியான அடிப்படையில் மேற்கொள்ளும் நடவடிக்கையொன்றாக CMEV இந்த முறையை தமது அமைப்பின் ஆரம்பம் தொடக்கம் பின்பற்றி வருகின்றது.

## தேர்தல் செயன்முறைகளின் புதிய போக்குகள்

ஒவ்வொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் வழமையாக பின்பற்றுகின்ற தேர்தல் கண்காணிப்பு வழிமுறைகளை நோக்கும் போது இம்முறை இவ்விரு அமைப்புக்களிலும் குறிப்பான அவதானத்திற்கு உட்பட்ட மூன்று துறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. தேர்தல் காலப்பகுதியினுள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்.
2. தேர்தல் பிரச்சாரம் மற்றும் அதன் செலவுகள்.
3. விசேட தேவையுடைய நபர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை செய்து கொடுத்தல்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தேர்தல் கண்காணிப்பின் முக்கிய அம்சமாக அமைவது அதற்காக இணைப்புச் செய்யப்பட்ட கண்காணிப்பாளர்களின் பக்கச்சார்பின்மை மற்றும் நடுநிலைத்தன்மை தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கண்காணிப்புக்கான வழிகாட்டு நெறிக்கோவைக்கு இசைவாக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு இவ்விரு அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பாடுகளை மேற்கொண்டன.

## தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு


இம்முறை உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது மாத்திரமன்றி 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட தேசிய மட்ட இரண்டு தேர்தல்களிலும் தெரியவந்த போக்கொன்று காணப்படுகின்றது. அதாவது உடலியில் ரீதியான இம்சைகளுக்கு அல்லது எதிர்கட்சிக்காரரின் சொத்துக்களை இலக்காகக் கொண்ட ஆக்கிரமிப்புடன் கூடிய தேர்தல் நடவடிக்கைகள் படிப்படியாக குறைவடைந்துள்ளமை என்பதாகும். அவ்வாறான தாக்குதல்மிக்க தேர்தல் பிரச்சாரங்களுக்கு பதிலாக மிகவும் பிரபல்யம் அடைந்திருப்பது எதிராளியை உளவியல் ரீதியாக தாக்கத்திற்கு உட்படுத்தும் விதத்தில்



பொய்யான மற்றும் குரோதமிக்க பிரச்சாரங்களை பரப்புவதாகும்.

அதற்கு மேலதிகமாக அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் மற்றும் அரச அலுவலர்களை சட்டவிரோதமாக தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துதல் அதிகளவில் இடம்பெறுகின்றமை எதிர்கால தேர்தல் செயற்பாடுகளின் போது நிச்சயமாக ஏற்படக்கூடிய சவாலொன்றாக தென்படுகின்றது. அவ்வாறான சம்பவங்கள் அறிக்கையிடப்படாத நிருவாக மாவட்டங்களை இம்முறை தேர்தலின் போது காணமுடியவில்லை.

கீழே காணப்படுவது இம்முறை காணப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது ஒவ்வொரு அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்பட்ட மொத்தச் சம்பவங்களின் பொழிப்பாகும்.




இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் அறிக்கையிடுநருக்கு மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்காக தேர்தல் காலப்பகுதியின் போது தேர்தல் ஆணைக்குழுவில் "தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்யும் இணைப்பு நிலையம்" தாபிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவில் தற்போது பணியாற்றுகின்ற மற்றும் இளைப்பாறிய அனுபவமும் மற்றும் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான விசேட பரீட்சயமும் கொண்ட அலுவலர்களை உள்ளடக்கிய நபர்களின் கீழ் செயற்படுகின்ற இதற்கு இலங்கை பொலிஸாரின் நேரடிப் பங்கபளிப்பும் கிடைக்கப்பெறுகின்றது. அதற்கு மேலதிகமாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தமக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளை ஆரம்பமாக அனுப்பிவைக்கின்ற இடமும் இதுவாகும். கண்காணிப்பு அமைப்புக்கள் பொதுவாக பின்பற்றுகின்ற வழிமுறையாதெனில் முறைப்பாடொன்றை ஊடகங்களுக்கு வழங்காது ஒரு சம்பவம் அறிக்கையிடப்பட்டவுடன், அது தீவிரமடைவதற்கு முன்னர் நேரடி தலையீடொன்றை செய்து குறித்த சம்பவத்தை தீர்த்துக்கொள்வதற்கு வழிவகுப்பதாகும். அவ்வாறு இம்முறைத் தேர்தலின் போது தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரிய சாட்சிகள் சகிதம் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களினால் சமர்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் அதிகமாகும் அவை தொடர்பாக ஆணைக்குழு மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக தேர்தலின் பங்குதார தரப்புக்களான அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட உதவி அதிகமாகும். இதற்கமைய இவ்வாறு தேர்தல் சாரந்த முறைப்பாடுகள் தொடர்பாகச் செயற்படுவதன் பிரதான நோக்கம் அனைத்து வேட்பாளர்களுக்கும் சம சந்தர்பங்களுடன் கூடிய நிலைமையொன்றை உருவாக்கிக்கொடுப்பதும் வாக்காளர்கள் தமக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு சுதந்திரமாகவும் அமைதியாகவும் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கான பின்னணியை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.
அதில் விசேட அம்சம் யாதெனில் ஒவ்வொரு நிறுவனங்களும் தேர்தல் முறைப்பாடுகளை வகைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரித்தான வழிமுறைகளுக்கமைய மேற்கொள்வது அதன் விசேட தன்மையாகும். அங்கு குறித்துறைக்கப்பட்ட ஒரு வழிமுறை பயன்படுத்தப்படுவதில்லை. குறிப்பாக தேர்தல் ஆணைக்குழு தமது தேர்தல் முறைப்பாடுகளை அறிக்கையிடும் போது அமைதிக் காலப்பகுதியினுள் (Silent Period) அறிக்கையிடப்படுகின்ற சம்பவங்கள் தனியான வகுதியொன்றினுள் கொள்ளப்படுகின்ற போதும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அவ்வாறானவற்றை மேற்கொள்வதில்லை. மேலும் இலங்கை பொலிஸார் தேர்தல் முறைப்பாடுகளை விசாரிக்கும் போது பின்பற்றுகின்ற வழமையாதெனில் பிரதான இரண்டு துறைகளின் கீழ் வகைப்படுத்துவதாகும். அதாவது தேர்தல் காலப்பகுதியினுள் அறிக்கையிடப்படுகின்ற சாதாரண தவறுகள்.(Election Related Normal Crimes) மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுதல் (Violation of Election Laws) என்றவாறு பெபரல் அமைப்பு சம்பவங்களை அறிக்கையிடும் போது உறுதி செய்யப்பட்ட மற்றும் உறுதிசெய்யப்படாத என்றவாறு இச்சம்பவங்கள் அறிக்கையிடப்படுகின்றன. இருப்பினும் CMEV தமது அமைப்பின் ஆரம்பம் தொடக்கம் மேற்கொள்கின்ற செயற்பாடாக அமைவது உறுதிசெய்து கொள்ளப்பட்ட சம்பவங்கள் மாத்திரம் பாரதூரமான (Major) அல்லது பாராதூரமற்ற (Minor) ஆகிய இரண்டு துறைகளின் கீழ் அறிக்கையிடுவதாகும். மேலும் ஒவ்வொரு அமைப்புக்களும் சமர்ப்பிக்கின்ற புள்ளிவிபரத் தரவுகளிலிருந்து தெளிவான மாற்றமொன்று காணப்பட முடியும். அவ்வாறான மாற்றத்திற்கான காரணங்கள் பல காணப்படுகின்றன.

1. தேர்தல் கண்காணிப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதி.
2. ஒரு முறைப்பாடு ஏதேனுமொரு காரணத்தால் இரு தடவைகள் குறிக்கப்படல் அல்லது ஒரே முறைப்பாடு இரண்டு தரப்புக்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தரப்புக்களால் சமர்பிக்கப்படல். (மேற்படி அட்டவணையில் காட்டப்படுகின்ற எண்ணிக்கைகளுக்கு அமைய இம்முறை உள்ளூர் அதிகார சபைத்தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டுள்ளமை தெரிகின்றது.)
3. குறித்த முறைப்பாடு ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் சமர்பிக்கப்படல்.
4. தேர்தல் முறைப்பாடொன்றாக குறிக்கப்படாது வேறு துறையொன்றின் கீழ் குறிக்கப்படல் (உதாரணமாக இலங்கை பொலிஸார் தமக்கு தேர்தல் மற்றும் தொடர்புடைய முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்ற போதிலும் அது தொடர்பாக செயற்படும் போது அதனை தேர்தல் முறைப்பாட்டு புத்தகத்தில் (EIB) குறிக்காது குற்றம் மற்றும் தொடர்புடைய முறைபாடொன்றாக (CIB) புத்தகத்தில் குறிப்பதற்கான இடமுண்டு. அவ்வாறான சந்தர்பங்களில் புள்ளிவிபரத் தரவுகளிடையே வேறுபாடுகள் தோன்ற முடியும்.
5. ஒவ்வொரு நிறுவனம் அல்லது தாபனங்கள் வசமுள்ள கட்டுப்படுத்தல் சாத்தியப்பாடு மற்றும் ஆளணியினர்

அதேபோன்று இத்தேர்தலின் போது CMEV மற்றும் பெபரல் அமைப்புக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட விசேட தேவையுடைய நபர்கள் சிலரின் சேவையும் தேர்தல் கண்காணிப்புக்காக பெற்றுக்கொள்ளப்பட்டதோடு CMEV அமைப்பினால் அவ்வாறான 10 நபர்கள் வரையில் கண்காணிப்பு பணியில் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் வெறுமனே முறைப்பாடுகளை அறிக்கையிடுதல் அல்லது அவற்றை ஊடகங்களுக்கு வழங்குதல் என்பவற்றை மாத்திரம் மேற்கொள்வதில்லை. தேர்தலொன்றில் காணப்பட வேண்டிய பண்புகளை மேலும் விருத்தி செய்வதற்காக முன்மொழிவுகளை சமர்பித்தல், அதற்கு தலையீடு செய்தல் என்பவற்றை தமது கண்காணிப்பின் பிரதான அம்சங்களாகக் கொண்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக சனநாயக நாடொன்றிலும் நடாத்தப்படுகின்ற தேர்தலொன்றில் காணப்பட வேண்டிய சர்வதேச தரத்தைப் பாதுகாப்பதற்காக வழங்குகின்ற பங்களிப்பையும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் எதிர்கால தேர்தலில் காணப்பட வேண்டிய நம்பகத் தன்மையை பாதுகாக்கும் எதிர்பார்ப்பில் மேற்கொள்கின்ற மற்றும் ஒரு முக்கிய பணியாக அமைவது பிரச்சனையொன்று ஏற்படுகின்ற போது நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு தலையீடு செய்வதாகும். இந்த நாட்டின் தேர்தல் முறைமையை மிகவும் விதிமுறை கொண்டதாக்குவதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணமாக இருப்பது இவ்வாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அவ்வப்போது நீதிமன்றங்களுக்குச் சென்று பல்வேறுபட்ட சட்டப் பொருள் கோடல்களை பெற்றுக்கொள்வதாகும். வாக்கெடுப்பு நிலையத்தினுள் ஏதேனும் வாக்களிப்பு முறைகேடொன்று இடம்பெறும் போது அவ்வாக்களிப்பு நிலையத்தின் தேர்தல் முடிவுகளை வறிதாக்கி வேறு தினமொன்றில் குறித்த தேர்தலை நடாத்துவதற்கு அப்போதைய தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் கிடைக்கப் பெற்றதானது CMEV நீதிமன்றத்தின் உதவியை நாடிய காரணத்தினாலாகும். மேலும் தேர்தல் முறைகேடுகளை தவிர்ப்பதற்கு முக்கிய காரணமொன்றான தேசிய அடையாள அட்டை வாக்களிப்பின் போது கட்டாயமாக்கப்பட்டதும் பெபரல் அமைப்பு அதனோடு தொடர்புடைய நீதிமன்றத் தலையீட்டை பெற்றுக் கொண்ட காரணத்தினாலாகும்.

சட்ட விரோத தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வெற்றியீட்டுகின்ற வேட்பாளரொருவருக்கு எதிராக பெபரல் மற்றும் CMEV என்பன இணைந்து உயர் நீதிமன்றத்தில் தேர்தல் மனுவெனறை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளன. வாக்காளர்களுக்கு உபசாரம் செய்தல், இலஞ்சம் வழங்குதல், என்பவற்றை மேற்கொண்டு தமது தேர்தல் பிரச்சார அலுவல்களை மேற்கொண்ட வேட்பளார்களின் பதிவியை இல்லாதொழித்தல் எதிர்கால தேர்தல் செயன்முறைகளை நீதியாகவம் சுதந்திரமாகவும் மேற்கொள்வதற்கு காரணமாக அமையுமென்பதோடு, அவ்வாறான தலையீடு முன்னுதாரணமாகவும் கருதப்படும்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அண்மைக்காலமாக நாட்டில் தேர்தல் முகாமைத்துவத்தில் உத்தியோகபூர்வ வகிபாகம் வகிக்கும் தேர்தல் ஆணைக்குழுவோடு இணைந்து செயற்பட்டு வாக்காளர்களின் உரிமைகளை பாதுகாப்பதாகும்.

அதற்கமைய எதிர்காலத்தில் உண்மையாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் நிதி மயப்படுத்தல் தொடர்பான புதிய சட்டத்தை அறிமுகம் செய்தல் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையரின் வாக்குரிமையை உறுதிசெய்தல் என்பவற்றுக்கு நடவடிக்கையெடுப்பதாகும். அதனை எதிர்கால தேர்தல் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலில் முக்கிய இரண்டு காரணங்களாக உள்ளடக்க வேண்டியுள்ளது.

## முடிவுரை

மக்கள் இறைமை பாதுகாக்கப்படுவது மற்றும் முறையாக பிரயோகிக்க முடிவது அது தொடர்பாக போதுமானளவு தலையீடு செய்கின்ற உயிர்ப்புள்ள சிவில் சமூக அமைப்பொன்று நாட்டில் காணப்பட்டால் மாத்திரமேயென்பது தொடர்ந்தும் கட்டுக்கதையல்ல. இந்நாட்டில் காலகாலமாக கண்டு கொண்ட ஓர் உண்மையாகும். ஆதலால் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்ற பணிகளுக்கு பிரசைகள் அவர்களின் பங்களிப்பைத் தொடர்சியாக வழங்குதல் வேண்டும்.

**- மஞ்சுல கஜனாயக்க.**
தேசிய இணைப்பாளர்,
தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம்







# பிராந்திய அரசாங்கங்கள் : குறிக்கோள்கள் மற்றும் பக்குவநிலை.

ஒரு நாடு. ஆனால் பல அரசாங்கங்கள். இதுதான் நாங்கள் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு தலைப்பாகும். சமஷ்டி அல்லது பெடரல் அரசு முறையென்று உள்ள நாட்டில் பல அரசாங்கங்கள் காணப்படுக்கின்றன என்பதுதான் பிரபல்யமானது. இருப்பினும் உண்மை நிலை என்னவென்றால் எல்லா நாடுகளிலும் பல அரசாங்கங்கள் காணப்படுகின்றன என்று சொல்வதுதான். ஒற்றையாட்சி என்று சொல்லப்படுகின்ற நாடுகளிலும் பல அரசாங்கங்கள் காணப்படுகின்றன. நமது நாட்டைப் பற்றி சிறிது எண்ணிப்பாருங்கள் மத்திய அரசாங்கமொன்று, மாகாண அரசாங்கங்கள் ஒன்பது, பிராந்திய அரசாங்கங்கள் முன்னூற்று நாற்பத்தொன்று (அதாவது மாநகர சபைகள் இருபத்தினான்கு, நகர சபைகள் நாற்பத்தொன்று, பிரதேச சபைகள் இருநூற்று எழுபத்தாறு) மொத்தம் முன்னூற்று ஐம்பத்தொன்று. அதாவது எமது நாட்டில் முறையான முன்னூற்று ஐம்பத்தொரு (351) உத்தியோகபூர்வ அரசாங்கங்கள் காணப்படுகின்றன. நாடு சிறிதாயினும் அரசாங்கங்களுக்குக் குறைவொன்றில்லை.

அதேபோன்று ஒன்பதாயிரத்து முன்னூற்று எழுபது (9370) மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர். பாராளுமன்றத்தில் 225, மாகாண சபைகளில் 455, பிரதேச சபைகளில் 8690 பேரும் உள்ளனர். அப்படிப் பார்த்தால் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு 2200 இற்கும் ஒரு பிரதிநிதி இருக்கின்றார். 2018 பிரதேச அரசாங்கத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (1,57,60,867) ஒரு கோடி ஐம்பத்தேழு இலட்டசத்து அறுபதாயிரத்து எண்ணூற்றறி அருபத்தேழு. அதற்கமைய ஆயிரத்து அறுநூற்று எண்பத்தியிரண்டு பேருக்கு ஒரு பிரதிநிதி (1682:1) காணப்படுகின்றார். இவர்கள் சரியான வித்தில் வேலை செய்தால் நாட்டை அபிவிருத்தி செய்வது கட்டியெழுப்புவது ஒரு கடினமான பணியல்ல.

சரியான விதத்தில் வேலை செய்வதற்கெனில் பிரதேச அரசாங்கங்களால் ஆற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் தொடர்பாக பிரதிநிதிகளுக்குப் போன்றே பொதுமக்களுக்கும் புரிந்துணர்வொன்று காணப்படுதல் வேண்டும். பிரதேச அரசாங்கமொன்றின் பிரதிநிதியொருவர் அவர் சார்ந்துள்ள கட்சி அல்லது குழுவுக்கு மாத்திரம் பொறுப்புக் கூறும் ஒருவரல்ல. தனது அதிகாரப் பிரதேசத்தின் அனைத்து மக்களுக்கும் மற்றும் இறுதியாக மொத்த நாட்டுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய ஒருவர். ஆதலால், இந்த பிரதிநிதித்துவப் பொறுப்பு எளிய இலகுவான ஒன்றல்லவென்பதை ஆரம்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரதேச அரசாங்கங்களின் அடிப்படை குறிக்கோளாக அமைவது பிரதேச மக்களின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச் சூழலை சிறந்த முறையில் மேம்படுத்துவதாகும். அதற்காக மக்கள் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அபிவிருத்தி மற்றும் நிருவாகம் ஆகியவற்றுக்கு மக்கள் பங்களிப்பை பெற்றுக் கொள்ளாத பிரதேச அரசாங்கமொன்று அல்லது பிரதிநிதியொருவர் இருப்பாராயின் அங்கு சிறந்த சனநாயகத்திற்கு மரணமே கிடைக்கும். இந்த பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பல கோணங்களிலும் காணக்கூடிய குறிப்பான குறிக்கோள்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதும் மற்றும் அர்ப்பணிப்பும் அவசியமாகும்.

அதற்கமைய பிரதேசக் கல்வி, விவசாயம், சுகாதார வசதிகள், சமூக நலனோம்பல், கீழ் கட்டுமான வசதிகள், சூழல் பாதுகாப்பு, வீடு மற்றும் பயன்பாட்டு சேவைகள், நீர்வழங்கல், கழிவு முகாமைத்துவம், விளையாட்டு மற்றும் கலாச்சார அலுவல்கள், சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு வசதிகளைத் திட்டமிடல் மற்றும் நிருமாண அலுவல்கள், தீயணைப்புச் சேவை மற்றும் மீட்டெடுத்தல் அலுவல்கள், வீதிப் பாராமரிப்பு, போக்குவரத்து, பொழுதுபோக்கு வசதிகள், மோதல் முகாமைத்துவம் மற்றும் சமாதானம், சகவாழ்வுக்கான வழிகளை வகுத்தல், மக்கள் பிரதிநிதிகளின், அலுவலர்களின் சமூக பொருளாதார, அரசியல், கலாச்சாரம் மற்றும் எழுத்தறிவு மட்டத்தை மேம்படுத்திக் கொள்வது என்பன அதன் துணை நோக்கங்களில் முக்கியமானவையாகும். இருப்பினும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அலுவல்களை மேற்கொள்கின்ற போது பொது மக்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அது பிரந்திய அரசாங்கம் மற்றும் அதன் பிரதிநிதிகளால் பின்பற்றியொழுக வேண்டிய அடிப்படை பக்குவக் கூற்றாகும். அல்லது பின்பற்றியொழுக வேண்டிய ஒரு ஒழுக்க முறையாகும்.

அதன் காரணத்தினால் தான் “நிருவாக மற்றும் அபிவிருத்தி அலுவல்களோடு தொடர்புடையதாக தீர்மானங்களையெடுக்கும் செயற்பாடுகளில் பொது மக்களுக்கு பிரதேச மட்டத்தில் பயனுறுதிமிக்க விதத்தில் கலந்து கொள்வதற்கான கூடுதல் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தோடு, பிரதேச சபைகளைத் தாபிப்பதற்கும் அச்சபைகளின் தத்துவங்கள், பணிகள், பணிப்பொறுப்புக்களை குறித்துரைத்துக் கொள்வதற்காகவும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்கான சட்டமொன்று” என பிரதேச சபை சட்டம் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக சொல்லப்படுகின்ற ஒரு விடயம் தான் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த இடத்தில் சட்டம் காணப்படுகின்றதென்பது, எமது நாட்டில் அவ்வாறு இல்லையென எண்ணுவீர்களாயின் சற்று நேரம் அந்த எண்ணத்தை மறந்து விடுங்கள். அரச நிருவாகத்தினுள் இடம்பெற வேண்டியது சட்டத்திற்கு கட்டுப்பட்டதாகவாகும். பிராந்திய அரசாங்கமும் அவ்வாறு இடம்பெறுதல் வேண்டும். சட்டம் அனைவரதும் இணக்கப்பாட்டோடு வகுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அந்த சட்டங்களை மதித்து பணியாற்றுவது அதாவது சட்டத்தின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதுதான் இரண்டாவது பக்குவக் கூற்றாகும்.

மூன்றாவது பக்குவக் கூற்று யாதெனில், தெள்ளத் தெளிவு அல்லது வெளிப்படைத்தன்மையை பாதுகாப்பது. பிரந்திய அரசாங்கமொன்றின் வேலை தொடர்பாக அதாவது வேலை செய்தல் அல்லது வேலை செய்யாமை தொடர்பாக நிதி மற்றும் வளப்பாவனை தொடர்பாக எதிர்கால திட்டம் தொடர்பாக, ஒப்பந்தம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை பொதுமக்களுக்குக் காணப்படுகின்றது. அதுபற்றி புரிந்து கொண்டு அந்த உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றவாறு பிரதிநிதிகள் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் செயலாற்றுதல் வேண்டும்.

நான்காவது பக்குவக் கூற்று வகைகூறல் அல்லது பொறுப்புக் கூறுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்பதாகும். பிரதேச ஆட்சியின் போது பொதுமக்கள், முகவர்கள் மற்றும் அலுவலர்கள் என மூன்று பிரிவினர் உள்ளனர். இம்மூன்று பிரிவிலும் பிரந்திய ஆட்சி புரிதல், ஆட்சி புரியாமை, வரவு மற்றும் செலவு தொடர்பில் ஒன்றுக்கொன்று பொறுப்புக்கூறுக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரந்திய அரசாங்கமொன்றின் அலுவல்கள் பிரதேச மக்களின் அனுமதி சகிதம் இடம்பெறுதல் வேண்டும். அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுகளுக்கும், தீர்மானங்களுக்கும் செல்வது மிக முக்கியமாகும். அது சனநாயகத்தின் பிரதானமான ஓர் இலட்சணமாகும். அதன் காரணமாக ஐந்தாவது பக்குவக் கூற்றாக மக்கள் விருப்புக்கேற்ப செயற்படுதல் என்பதை பின்பற்றுதல் வேண்டும்.

பிரதேசத்தின் அனைத்து மக்கள் குழுக்கள் மற்றும் கிளைகள் பிரதேச ஆட்சி அலுவல்களில் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். எந்தவொரு குழுவையும், பிரிவையும் ஒதுக்கிவிடுதல் கூடாது. சமயம், மொழி, இனம், ஆண், பெண் பால்நிலை, கோத்திரம், பிரதேசவாதம் என்பவற்றை கருத்தில் கொண்டு எவரையும் ஒதுக்கிவிடுதல் கூடாது. அதாவது அனைவருக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும். அதற்கான பக்குவக் கூற்றுதான் நேர்மை என்பது.

அதேபோன்று பிரதேச அரசாங்கத்திற்கு எதிர்கால நோக்கொன்று இருத்தல் வேண்டும். அந்த நோக்கு குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால நோக்காக இருக்க முடியும். அறிந்து கொண்டு சென்றால் கதிர்காமம், அறியாமல் சென்றால் இடைநடுவில் அந்த எதிர்கால நோக்கின் அடிப்படையில் கூட்டாக அந்த நோக்கு மற்றும் பணிக்கூற்றை அடைந்து கொள்வதற்கு பிரதிநிதிகளும் அலுவலர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். மக்கள் இதில் தலையீடு செய்து ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். அதற்கு சிறியதோர் தூண்டுதலை வழங்குவதே இந்தக் கடிதத்தின் நோக்கமாகும்.


**- தம்ம திசாநாயக்க**
சிரேட்ட விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் அரச கொள்கைகள் கல்விப் பிரிவு







# 2018.02.10 ஆந் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களின்போது கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை




ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன - 4,999,419
ஐக்கிய தேசியக் கட்சி - 3,632,201
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 975,862
மக்கள் விடுதலை முன்னணி - 710,528
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - 516,180
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி - 337,790
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை) - 100,636
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -92,897
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் - 85,290
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - 84,420
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி -74,143
தமிழர் விடுதலைக் கூட்டணி - 72,585
ஒருமித்த முற்போக்கு கூட்டணி - 48,551
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் - 44,063
தேசிய மக்கள் கட்சி -17,311
தேசிய சுதந்திர முன்னணி - 40,290
சுயேச்சைக் குழு 2 (மஹரகம நகர சபை)- 44,783
சுயேச்சைக் குழு 1 (மஹியங்களை பிரதேச சபை) -18,742
சுயேச்சைக் குழு (பேருவளை பிரதேச சபை) - 10,862
சுயேச்சைக் குழு 1 (பண்டாரவளை நகர சபை) - 3,319

குறிப்பு :

01. ஏதேனுமொரு கட்சி, முழுத் தீவிலும் 25,000 வாக்குகளுக்கு மேலாகப் பெற்றிருக்கும்பட்சத்தில் மாத்திரமே இக்குறிப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.
02. பண்டாரவளை மாநகர சபை, மஹரகம மாநகர சபை, பேருவளை நகர சபை மற்றும் மஹியங்கனை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சிச் சபைகளின் பெரும்பான்மை உறுப்பினர் பதவிகள் சுயேச்சைக் குழுக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால், அச்சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் தொகை வேறாக இந்த குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.







# கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால் அதுவரை பாராளுமன்றம் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்காக பயன்படுத்தப்பட்ட எளிய பெரும்பான்மை தேர்தல் முறைமை அல்லது அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர்களை பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தல் (First Past the Post Voting - FPP) தேர்தல் முறைமைக்குப் பதிலாக விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை(Proportional Representation System - PR)அறிமுகம் செய்யப்பட்டது.

1979 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் மாநகர சபைகள், பட்டின சபைகள் தேர்தலுக்காக மாத்திரம் விருப்பு வாக்குகளற்ற விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது. இங்கு ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிற்கு இரண்டு மிகை ஆசனங்கள் கிடைக்கப்பெற்றதோடு, உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது அளிக்கப்பட்ட வாக்குகளின் 12.5% வாக்குத் தொகையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அதேபோன்று இங்கு விருப்பு வாக்கு அடையாளமிடல் மேற்கொள்ளப்படவில்லையென்பதோடு, பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் மேல் இருந்து கீழாக முதன்மை அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த பட்டியல் முறைமைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் காரணமாக 1987 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக தேர்தல் பிற்போடப்பட்டது. ஆதலால், விருப்பு வாக்கு முறை முதன்முதலாக 1988 மாகாண சபைகள் தேர்தல்களின் போது நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போதும் இந்த விருப்பு வாக்கு முறை பயன்படுத்தப்பட்டது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையினுள் வாக்கெடுப்பு மாவட்டம் பரந்த நிலப்பகுதியினுள் வியாபித்து காணப்பட்டமையினால், அதுவரை மக்களுக்கு பழக்கப்பட்டு காணப்பட்ட வட்டாரத்திற்கு அல்லது தொகுதிக்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினர் இல்லாமை காரணமாக சாதாரண வாக்காளர்களுக்கு தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் இருக்கவில்லை. அதேபோன்று மிகப் பெரிய நிலப்பகுதி பூராக வாக்கெடுப்பு மாவட்டம் வியாபித்து காணப்பட்டமை காரணமாக வேட்பாளர்களுக்கு தமது தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக பெரும்தொகை பணத்தை செலவு செய்ய நேரிட்டமையும் பணமல்லாத வேறு வளங்களை மிக பாரியளவில் பயன்படுத்த நேரிட்டமை ஆகிய காரணங்களால் இம்முறைமை தொடர்பாக பெரும்பாலான தரப்புக்களிடமிருந்து ஆட்சேபனைகள் தோற்றம் பெற்றன. அதேபோன்று திறமையான ஆற்றல் கொண்ட வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களை தோற்கடித்து பண பலம் கொண்ட தகைமையற்ற நபர்கள் மற்றும் பிரபலமான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் போக்கொன்றைக் காண முடிந்தது. ஆதலால், இத்தேர்தல் முறைமை தொடர்பாக பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் தோற்றம் பெற்றமையினால் புதிய தேர்தல் முறைமையொன்று தொடர்பாக பாராளுமன்றத் தெரிவு குழுவினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கௌரவ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்தெரிவுக் குழுவின் முன்மொழிவுகளின் பயனாக கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட FPP மற்றும் PR முறைகள் இரண்டினதும் சாதகமான அம்சங்களை ஒன்று சேர்த்து புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதனை ஆரம்பமாக உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலில் அறிமுகம் செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்டதோடு, அதற்கமைய 2012 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தின் மூலம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் வட்டார மற்றும் விகிதாசார முறைகளின் அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கிய கலப்பு முறையில் நடாத்த முடியுமென சட்டம் நிறைவேற்றப்பட்டது. அங்கு வட்டார முறையில் 70% மும் விகிதாசார முறையில் 30% மும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய உள்ளூர் அதிகார சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்குமுரிய வட்டாரங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்காக திரு. ஜயலத் ரவீ திசாநாயக்க அவர்களின் தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதோடு, அக்குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய எல்லை வரையறைக்குழுவின் அறிக்கை 2015 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்டது. உள்ளூர் அதிகார சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் அக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக திரு. அசோக்க பிரீஸ் அவர்களின் தலைமையில் புதிய குழுவொன்று 2015 ஒக்தோபர் மாதம் 22 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டதோடு, அக்குழுவின் மீளாய்வு அறிக்கை 2017 பெப்புருவரி 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

மேலும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தில் இனங்காணப்பட்ட வழுக்களை திருத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் 2017 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இச்சட்டத்திற்கமைய ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையினதும் அதிகாரப் பிரதேசத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 60% வட்டாரங்களிலிருந்து வெற்றியீட்டுகின்ற உறுப்பினர்கள் மற்றும் எஞ்சிய 40% மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களைக் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும். 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்திற்கமைய சபையொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யில் 25% பெண்கள் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டது.

போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு மொத்த உள்ளூர் அதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் பெற்றுக் கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய இம்முறைமை 100% விகிதாசார முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு முறையாக தென்படுகின்றது. அதேபோன்று உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர். அதற்கமைய வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினரொருவர் இம்முறைமையின் மூலம் கட்டாயமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் வெற்றியீட்டியுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படின் வெற்றியீட்டிய வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக உரித்துப் பெரும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைக்காக மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

அதேபோன்று ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு அவர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக உரித்துடைய உறுப்பினர் எண்ணிக்கையை விட வட்டார மட்டத்தில் வெற்றியீட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமெனில், அந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையொன்றினால் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். மேலும் அதிகரிக்கின்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொங்கு ஆசனம் (Over Hang) என அழைக்கப்படும். இவ்வாறு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லையெனில், ஏனைய அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களுக்கு உறுப்பினர் பதவிகளை வழங்வதற்கான சாத்தியப்பாடு இல்லையென்பதால், அவ்வாக்காளர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதி தவிர்ப்பதற்காக தொங்கு ஆசனம் (Over Hang) இச்சட்டத்தினுள் தோன்றியுள்ளது.

இதற்கமைய காணப்பட்ட இரண்டு தேர்தல் முறைகளை விடவும் சாதகமான அம்சங்கள் இம்முறையினுள் காணப்படுவதாகவும் இனங்காணப்பட்ட சில பிரச்சினைகளை சட்ட ஏற்பாடுகளின் மூலம் சரி செய்து கொண்டு இந்த முறைமையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது மிகவும் பயனுள்ளதென்பது தெளிவாகின்றது.

**- சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்
(உள்ளூர் அதிகார சபை)









# ஜேர்மன் தேர்தல் முறைமை

கடந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களின் போது கலப்பு விகிதாசார முறைமையைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நடாத்தப்பட்டதோடு இந்த முறையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் ஒரு நாடாக ஜேர்மன் நாட்டைக் குறிப்பிட முடியும். இந்தக் கட்டுரை மூலம் அந்த ஜேர்மனிய முறை தொடர்பான எளிய விளக்கமொன்றை வாசகர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜேர்மனிய சனநாயகத்தின் பிரதானமான அடிப்படையாகக் காணப்படுவது ஜேர்மனிய அரசியல் யாப்பின் 20 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள "All Power Comes from the People" என்பதாகும். அதவது மக்களின் இறைமை அதிகாரத்தின் மூலம் ஏனைய அனைத்து அரசியல் அதிகாரங்களும் தோன்றுகின்றன என்பதாகும்.

இணைடாம் உலக மாகா யுத்ததத்தின் பின்னர் ஜேர்மன் இரண்டாகப் பிளவுபட்டதோடு, மேற்கு ஜேர்மனியினால் 1949 ஆம் ஆண்டிலிருந்து கலப்பு விகிதாசார முறைமை தொடர்பாக பல்வேறு முறைகளில் பரீட்சித்துப் பார்க்கட்டது. 1990 இல் ஜேர்மன் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் ஜேர்மனியல் பயன்படுத்தப்படுகின்ற தேர்தல் முறைமை பயன்படுத்தப்படுகின்றது.

## வாக்காளரொருவராவதற்கான தகைமைகள்

18 வயதிற்கு மேற்பட்ட ஜேர்மன் நாட்டினுள் கடந்த 25 வருடங்களினுள் 03 மாதங்களுக்கு குறையாத காலப்பகுதி வசித்து வந்த, குற்றவியல் தண்டனைகளுக்கு உட்படாத பிரசைகளுக்கு வாக்குரிமை உரித்தாகும்.

## புண்டஸ்டெக் என்றால் என்ன?

புன்டஸ்டெக் என்பது ஜேர்மன் பாராளுமன்றமாகும். இந்த ஜேர்மன் பாராளுமன்றத்திற்காக நான்கு வருடங்களுக்கொரு தடவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு புன்டஸ்டெகில் வாக்கெடுப்பின் மூலம் அரசின் தலைவரான சான்ஸ்சலர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## லான்டி என்றால் என்ன?

ஜேர்மன் 16 மாநிலங்களைக் கொண்டுள்ளதோடு இதில் ஒரு மாநிலம் லான்டி என அழைக்கப்படுகின்றது இந்த லான்டி 299 வட்டாரங்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## இரட்டை வாக்கு

ஜேர்மன் தேர்தல் முறைமையின் முக்கிய அம்சம் இரட்டை வாக்கு முறைமையாகும். அதாவது ஒரு நபருக்கு இரண்டு வாக்குகள் காணப்படுவதாகும்.

## முதலாம் வாக்கு

முதலாவது வாக்கின் மூலம் குறித்த வாக்காளருக்கு தமது வட்டாரத்தின் உறுப்பினரை தெரிவு செய்வதற்காகப் பிரயோகிக்க முடியும்

## இரண்டாம் வாக்கு

இரண்டாம் வாக்கின் மூலம் ஆட்சி அதிகாரத்தை வழங்க வேண்டுமென குறித்த வாக்காளர் எதிர்பார்க்கின்ற கட்சிக்காகப் பிரயோகிக்க முடியும்.

இவ்வாறு அளிக்கப்படும் இரண்டாவது வாக்குளின் விகிதாசாரத்திற்கமைய 5% வீத்திற்கு மேற்பட்ட வாக்குளைப் பெற்றுக் கொள்ளும் கட்சிகளிலிருந்து ஒவ்வொரு கட்சியினாலும் ஜேர்மன் பாராளுமன்றத்திற்குத்




16 වන ජර්මානු පාර්ලිමේන්තු මැතිවරණයට භාවිතා කල අදර්ශ ඡන්ද පත්‍රිකාවකි

தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இருப்பினும் வாட்டாரமொன்றிட்காகப் பெற்றுக் கொண்ட அளவும் தீர்மானிக்கப்படும்.அந்த உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையில் முதலாவது வாக்கின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை கழிக்கப்பட்ட பின்னர் மீதமாகவுள்ள உறுப்பினர் பதவிகள் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும். ஏதேனுமொரு வித்தில் கட்சிகளினால் விகிதாசார அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் ஆசனங்களைவிட அவர்களினால் வட்டார மட்டத்தில் முதலாவது வாக்கின் மூலம் பெற்றுக் கொண்டுள்ள ஆசங்களின் எண்ணிக்கைவிட அதிகமெனில் அந்த நிலைமை “தொங்கு ஆசனம்” (Over hang seats)என அழைக்கப்படும். ஜேர்மன் தேர்தல் முறைமையின் விசேட அம்சமாக இந்த தொங்கு ஆசனங்களைக் குறிப்பிட முடியும். கடந்த ஜேர்மன் தேர்தலின் போது இந்த தொங்கு ஆசனங்களின் எண்ணிக்கை நூறை விட அதிகமாகக் காணப்பட்டது. அது தேர்தலின் இறுதி முடிவைவிட தீர்மானமிக்க பங்களிப்பைக் கொண்டிருந்தது

### ஜேர்மன் தேர்தல் முறைமையின் அனுகூலங்கள்.

- ஒவ்வொரு வாக்கிற்கும் சமமான பெறுமதி கிடைத்தல்
- வட்டார மட்டத்தில் பிரதேச பிரதிநிதித்துவம் கிடைத்தல்
- நேரடியாகப் போட்டியிட விருப்பமில்லாத போது பல்வேறு துறைகளின் அளவு விகிதாசார பட்டியல் மூலம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவும் செய்ய முடிதல்.
- 5% ஆகக் குறைந்த எல்லை காரணமாக அசாதாரண நியாயமற்ற பிரதிநிதித்துவம் ஏற்படாமை

### ஜேர்மன் தேர்தல் முறைமையின் பிரதிகூலங்கள்.

- சாதாரண வாக்காளர்கள் புரிந்து கொள்வதற்கு சிரமமான ஓரளவு சிக்கல் கொண்ட முறைமையாகக் காணப்பட்டல்
- பட்டியல் உறுப்பினர் முறை நேரடி பிரதிநிதித்துவ சனநாயகத்திற்கு முரண்படுதல்
- தனிக் கட்சியொன்றுக்கு பெரும்பாண்மையைப் பெற்றுக் கொள்வது சிரமமாக காணப்படல்.

ஜேர்மன் தேர்தல் முறைமையின் மூலம் தோற்றம் பெறுகின்ற அரசாங்கம் பெரும்பாலும் கூட்டு அரசாங்கமாகக் காணப்படுவதோடு ஜேர்மன் நாட்டில் காணப்படும் சமூக, அரசியல், பொரளாதார விசேட அம்சங்களை நோக்கும் போது இந்தத் தேர்தல் முறைமை ஜேர்மன் நாட்டுக்குச் சிறந்ததாகும்.

- ஶ்ரீன் யாப்பா பொரலெஸ்ஸ
உதவித் தேர்தல்கள் ஆணையாளர்
(உள்ளூர் அதிகார சபைகள்)

# பளிங்குச் சுவர்

ஆழ்கடலின் சில்லென்ற காற்றை
அனுபவிக்க
இறங்கி வா இந்த மிகப் பெரிய
நதியினுள்ளே...
அங்குமிங்கும் நீந்தி நீந்தி
ஐயமின்றி விரைந்து வா
நதியினுள்ளே...

நதியின் இரு மருங்கிலும்
விரக்தியாய் அமர்ந்து
நீரை உசாவுதல் முறையல்ல
நடந்து வா
நதியினுள்ளே

விரும்பிய நீரலையில் சங்கமிக்க
விரும்பமெனில் ஆற்று நீரை
நிறுத்திவிட
எங்காவது அதைத் துவங்க
விரைந்து வா நதியினுள்ளே

இந்த ஆற்று நீரும்,
சனநாயகமும்,
உண்ணது மாத்திரமே
அடுத்தவரது அல்ல,
அவ்வுரிமையைக் காத்திட
ஆரம்பமாய்
ஆற்று நீரில்
இறங்கிவிடு...

- லீலநாத் விக்கிரமஆரச்சி
உதவித் தேர்தல்கள் ஆணையாளர்
(பொலன்னறுவை)








# இரவு பூராகவும் விழித்திருந்து

அரசியல்வாதிகள் தமது கொள்கைகளுக்கு அமைவாக செயற்படாது நாட்டில் பேயாட்டம் ஆடும் போது, தமது நாட்டின் எதிர்காலத்தோடு விளையாடும் போது, நாட்டு மக்களுக்குள்ள மாற்று வழியென்ன? இன்னும் சில வருடங்களின் பின்னர் வருகின்ற பொதுத் தேர்தலொன்றின் போது எதிர்கட்சி வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காகத் காத்திருப்பதா? வேறு பெயரில் மற்றும் வேறு நிறத்தில் செயலிழந்து சிதைந்து போன அரசியல் முறைமையில் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுப்பதா? மக்கள் தன்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதைத் தவிர அதன் மூலம் உண்மையான பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கின்றதா? தமது பிரதிநிதிகளாக இருக்க வேண்டிய ஆட்சியாளர்கள் தம்மை கவனிக்காது அவர்கள் விரும்பிவாறு நாட்டை மேலும் மேலும் அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வதற்க இடமளிக்க வேண்டுமா? அரசியல் அவர்களுக்கு மாத்திரமே குறித்தொதுக்கப்பட்ட, மற்றவர்கள் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டிய ஒன்றா? 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுப் பிரசைகள் சிலர் அது அவ்வாறு இல்லாத மற்றும் அவ்வாறில்லாதிருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்தனர். அடுத்த எதிரப்புக் கூட்டத்தின் போது தாம் வெறுமனே வீட்டுக்குச் செல்லக் கூடாதெனத் தீர்மானித்த அவர்கள் 31 ஆம் திகதி பரீஸ் நகரில் பகிரங்க பொதுமக்கள் சதுக்கமான Place de la Republique (Republic Square) இல் சமூகத்தில் பல்வேறுபட்ட தரப்பினரும் ஒன்று கூடினர். பிரதானமாக உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பேராசிரியர்கள், வைத்தியர்கள், வியாபாரிகள் மற்றும் சாரதிகள் என்ற அடிப்படையில் பல்வேறு தொழிற்சங்கங்களும் இதில் இணைந்து கொண்டன. சதுக்கத்தில் அமர்ந்து கொண்ட அவர்கள் ஒவ்வொருவரதும் கைகளுக்கு மைக்ரோபோனை அனுப்பி அவர்கள் தத்தமது கருத்துக்களை வெளியிட்டு வாதங்களில் ஈடுபட்டு நாட்டுக்காக தமது குரலை மக்களிடம் கொண்டு செல்வதற்கு முழு இரவும் நடவடிக்கையெடுத்தனர்.

அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்கரர்கள் சதுக்கத்தை தமது கட்டுப்பாட்டிக் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கையெடுத்தனர். முதல் நாள் தடைகள் ஏற்பட்ட போதிலும் மறுநாளம் மீண்டும் அவர்கள் வருகைதந்தனர். தினமும் மாலை நேரமாகும் போது அதிகமான மக்கள் ஒன்று கூடியமை பிரான்ஸ் அரசுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. அவர்கள் அவ்வாறு எதிர்ப்புக் கூட்டங்கள் மற்றும் விவாதங்களுக்காக நபரொருவரின் அல்லது குழுவொன்றின் அழுத்தம் காரணமான ஒன்று கூடவில்லை. காணப்படுகின்ற அரசியல் முறைமை அவர்களுக்கு பல வருடங்களாக களைப்பையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக அரசுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மற்றும் உலகிற்கும் தெரியும் வகையில் தமது குரலை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. சுய உரிமைகள் தமது நாட்டுக்காக அரசியலில் ஈடுபட வேண்டியது தொழில் ரீதியான அரசியல் தொழிற்படுநர்கள் மாத்திரமல்ல என்பதை அவர்கள் புரிந்து வைத்திருந்தனர். இவ்வாறு ஆரம்பமான பிரான்ஸ் மக்கள் இயக்கம் Nuit Debout (Up all night - இரவு பூராகவும் விழிப்புடன் என அழைக்கப்படுகின்றது. உலகில் பெரும்பாலான மக்களின் கவனத்தை ஈர்த்த இந்த எதிர்ப்பு இயக்கம் ஏற்படுவதற்குக் காரணம் பெப்புருவரி மாதம் ஒரு நாள் கூடிய தொழிற் சங்கங்கள், உயர் கல்வி மாணவர்களைக் உள்ளடக்கிய இடதுசாரிக் கருத்துக் கொண்ட சிலர் பாரியளவு மக்கள் கவனத்தையும் கவர்ச்சியையும் பெற்ற Nuit Debout மக்கள் இயக்கம் ஒருவாரம் வரையில் கழியும் போது பிரான்ஸ் நாட்டினுள் 30 நகரங்கள் வரையில் பரவியிருந்தது. 4,5 வாரங்கள் கழியும் போது அது பிரான்ஸிலும் பிரான்ஸுக்கு வெளியில் ஜேர்மன், போர்த்துக்கள், பெல்ஜயம் போன்ற ஐரோப்பிய நாடுகளில் 300 நகரங்கள் வரை Nuit Debout என்ற பெயரில் இரவு எதிர்ப்புக் கூட்டங்கள் பரவிச் சென்றன. ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோட் நகரத்திற்கும் ஐரோப்பாவிற்கு அப்பால் கனடாவின் மொன்ரியல் நகரத்திலும் பொதுச்சபைக் கூட்டத்திற்காகச் (General Assembly) சிலர் ஒன்று கூடினர். ஆரம்பமாக பரிஸ் நகரில் Place de la Republicque மையமாகக் கொண்டு எதிர்ப்பு மற்றும் விவாதம், பிரான்ஸ் சனாதிபதி பிரன்கொயிஸ் ஹொலந்தே Place de la Republique அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட (Francois Hollande) அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட El Khomri Law/ Loi Travail என அழைக்கப்பட்ட உத்தேச தொழிலாளர் சட்ட மறுசீரமைப்புக்கு எதிராகவேயாகும். அதற்கு மேலதிகமாக வரி மறைப்பு பிரச்சினை, ஆட்சியாளர்களின் ஒழுங்கீனங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் விவாதங்களும் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. அரசியல்வாதிகள் தம்மை நீண்ட காலமாக ஏமாற்றியுள்ளனரெனப் புரிந்து கொண்ட மக்கள் இந்த காணப்படுகின்ற அரசியல் முறைமையை தொடர்ந்நும் பேணிச் செல்வது பயனற்றதெனவும், அதன் காரணமாக அரசியலின் மூக்கணாங்கயிற்றைத் (Reins) தமது கைகளுக்கு எடுக்க வேண்டுமென்பதை புரிந்து வைத்திருந்தனர். நியமனம் செய்யப்பட்ட தலைவர் அல்லது ஊடகப் பேச்சாளர் இன்றி அனைவரும் தமது குரலை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புக் கொண்ட, எவ்விதமான சர்வாதிகாரமும் இல்லாத ஒரு மேடையான இங்கு பிரசைகளின் பிரதிநிதித்துவம, வெளிப்படுத்தும் ஊடகமொன்றாகவன்றி வழமையான அரசியல் கட்சி "வாக்கு இயந்திம்" வாக்கு மெசின் போன்று மாத்திரம் செயற்படும் அரசியலுக்குப் பதிலாக அரசியல் முறைமை மீண்டும் புதியவடிவில் தோற்றுவிக்க அவர்கள் முயற்சி செய்தனர். இந்த Nuit Debout இரவு எதிர்ப்பு மக்கள் இயக்கம் சனநாயகப் பங்கேற்பிற்காக மிகவும் புரட்சிகரமான பிரவேசமொன்றைக் காட்டுகின்றது. வழமையான எதிர்ப்பு அல்லது ஆர்ப்பாட்டம் என்பவற்றுக்குப் பதிலாக இந்த இரவு எதிர்ப்பு மற்றும் விவாதம் இதன் காரணமாகவே மிகவும் பிரபல்யம் அடைந்தது.




**"அரசியல் தொழில் ரீதியான தொழிற்படுநர்களுக்கு மாத்திரம் குறித்தொதுக்கப்பட்ட ஒன்றல்ல. அது அனைவருக்கும் உரியதாகும்: எனப் பிரான்ஸ் நாட்டின் இரவு ஆர்ப்பாட்டக்கரர்கள் தெரிவிக்கின்றனர்."**

**- சந்தகெலும் வேவிட்டசந்தகெலும் வேவிட்ட**
முகநூல் பக்கத்திலிருந்து.




## ஆலோசனைக் குழு

மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜுவன் எச். ஹூல்
ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க
எச். எம். ரீ. ரீ. ஹேரத்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க

தொகுப்பு – சன்ன பீ. த. சில்வா
கணினி வடிவமைப்பு – அமில பிரசாத்
அச்சிடல் ஆலோசனை – ஜகத் சந்திரலால் த சில்வா, இலங்கை முதலீட்டுச் சபை
அச்சுப் பதிப்பு – அரசாங்க அச்சகம்
வெளியீடு – ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு



**உங்கள் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு எழுதுங்கள்**

தொகுப்பாசிரியர் – புள்ளடியின் பலம்
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை.

(+94)0112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl



**இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்களல்ல.**